# தென்னகத் தாரகை

சாவகச்சேரி

* விளையாட்டுக்கழகம்
* சனசமூக நிலையம்
* கலா மன்றம்

## 6 வது

## ஆண்டு விழா மலர்

" மெய்ப்பொருள் காண்பதறிவு "

16-04-1977

தென்னகத்

தாரகை

சமூகவானில் சுடர்விட்டொளிர

எமது

நல்வாழ்த்துக்கள்!

# திருக்கணித அச்சகம்

மட்டுவில், சாவகச்சேரி.

A. KUMARATHASAN
KALAIMAGAL ROAD
WEST
JAFFNA

சாவகச்சேரி

# தென்னகத் தாரகை

# SOUTHERN STARS

SPORTS CLUB ✶ COMMUNITY CENTRE ✶ KALAMANTRAM

✶

# 6 வது
# ஆண்டு விழா மலர்

✶

16-04-1977

✶

மலர் ஆசிரியர்: ஏ. எம். கமால்

தென்னகத்தாரகையே!

உன் பணி சிறந்து பல்லாண்டு வாழ

வாழ்த்துகிறோம்

SHANTHI

WATCH

work

சாந்தி வாச் வேக்

149 கண்டி வீதி

சாவகச்சேரி

# கழகக் கீதம்

தென்னகத் தாரகை மின்னவே!

உடலுடனே உள்ள மெல்லாம்
உறுதி பெற்றுப் பாரிலே
திடமுடனே திகழ வல்ல
திசையுல குணர்த் துவோம். (தென்னக)

உறுதி பெற்ற உடலிலே
உயர்ந்த சிந்த னையென
அறுதியிட்டுக் கூறிய நல்
அறிவுரை தெருட்டு வோம் (தென்னக)

சாதிமத பேத மற்று
சரிநிகர் சமான மாய்
சமத்து வத்தை நாட்டவினை
யாட்ட ரங்கிற் கூடுவோம். (தென்னக)

இன்பத்தமிழ் கலைக ளெலாம்
இங்கித மாய்ப் பொங்கவே
பங்கமிலா எம் கருத்தைப்
பாரு ளோர்க்குச் சாற்றுவோம். (தென்னக)

தென்னகத்தாரகையின்
ஆண்டு விழா சிறக்க
எமது நல்வாழ்த்துகள்!

# நவரெத்தினம் பிரிண்டுகள்

## SAREE PRINTING

புதிய பழைய சேலைகள், நீங்கள் விரும்பும் நவீன டிசைன்களில்
கண்கவர் வர்ணங்களில் அச்சடித்து குறுகியகால
எல்லையில் தரப்படும்.

உங்கள் குடும்பத்திற்குகந்த எல்லாவித
**கைத்தறி துணிவகைகள்**
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

எமது புதிய காட்சி அறைக்கு விஜயம் செய்யுங்கள்

## "கைத்தறி மாளிகை"

இலங்கை [கைத்தறி] பிடவை உற்பத்தியாளர்
டச்சு வீதி, சாவகச்சேரி.

**HANDLOOM HOUSE**
DUTCH ROAD, CHAVAKACHCHERI.

சாவகச்சேரி, தேசியப் பேரவை உறுப்பினரும்,
தென்னகத் தாரகையின் காப்பாளர்களில் ஒருவருமான,

## உயர்திரு வ. ந. நவரத்தினம் அவர்களின்

# ஆசிச் செய்தி

தென்னகத் தாரகையின் ஆறாவது ஆண்டு விழா மலருக்கு ஆசிச்செய்தி நல்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

சுய முயற்சியும் உழைப்பும் தான், ஒரு மனித சமுதாயம் உயர்வதற்கு வாழ்க்கையில் ஏணியாக அமையமுடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

தென்னகத் தாரகை ஆரம்பத்தில் சாதாரண ஒரு விளையாட்டுக் கழகமாகவே ஆரம்ப மானது. இது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, இன்று நமது கலை, கலாச்சாரம் உட்படச் சகல துறைகளிலும் ஆல் போல் தழைத்து வளர்ந்துள்ளது என்றால், அதற் குக் காரணம் அதைக் கட்டி வளர்த்துவரும் இளை ஞர்களின் ஆர்வம்தான் என்றால் மிகையாகாது.

இந்த இளைஞர்களின் விடாமுயற்சியும் ஒத் துழைப்பும், ஏனையோர்க்கும் ஒரு முன்னோடியா கவும், வழிகாட்டியாகவும் அமையட்டும்.

தென்னகத் தாரகை இந்த நாட்டிலேயே துருவ தாரகையாக விளங்கட்டும். ஒளி பரவட்டும்.

வ. ந. நவரத்தினம்

தென்னகத்தாரகை

நீடூழி வாழ வாழ்த்துபவர்கள்

# நித்தி லைட் அன் ஓட்டோ எஞ்சினியர்ஸ்

நீர்வேலி.

திருவிழா களியாட்டவிழா திருமண வைபவங்கள்

போன்றவற்றிற்கு

ஏற்ற மின்னொளியை அமைத்து உரிய நேரத்தில்

செய்வதற்கு உத்தரவாதமுடையவர்கள்

அத்துடன்

வில்லியேஸ், ஜாப், B. S. A. போன்ற சகலவிதமான

நீர் இறைக்கும் இயந்திரங்களை

சிறந்த முறையில் உத்தரவாதத்துடன்

திருத்திக்கொடுப்பவர்கள்

இன்றே தொடர்புகொள்ளுங்கள்:-

சி. முத்தையா

நித்தி லைட்

நீர்வேலி.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதியரசர்

## உயர்திரு இ. பாலகிட்ணர் அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

தென்னகத் தாரகையின் ஆறுவது ஆண்டு விழாவையொட்டி இவ் ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொண்டு பல துறைகளிலும் ஆற்றிவரும் சீரிய தொண்டு தென்னகத் தாரகையின் சிறப்புக்கு இலக்கணமாக அமைந்துள்ளது.

தென்மராட்சி மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்திருக்கும் இவ்இயக்கம் மேலும் பரவலாக்கப்பட்டு, மக்களின் மேம்பாட்டுக்கு இடையறாது உழைக்கவேண்டுமென விரும்புகின்றேன். தென்னகத் தாரகையின் நல்நோக்கும், செயலும் வெற்றிபெற என் நல்லாசிகள்.

சாவகச்சேரி.

**இ. பாலகிட்ணர்**

"சினக்ஸ்"

சூடான டீ
சுவையான கோப்பி
தரமான (பம்பே) ஸ்வீட்ஸ்
அதி மதுர அடை
அற்புதவடை
இவையே எமது கொடை
சுவைக்க என்ன தடை
நாடுங்கள் நமது கடை.

"சினக்ஸ்"

27, நவீன சந்தை
யாழ்ப்பாணம்

With best Compliments
From

V

MADEENA
WATCH REPAIRS

Specialist in watch
& Clock works

KACHCHAI ROAD,
CHAVAKACHCHERI.

தரமான தையல் வேலைகளுக்கு
யாழ்நகரில் ஓரே ஸ்தாபனம்

AMEER TEX

NO- 24 A, GRAND BAZAAR
JAFFNA.

அமீர் ரெக்ஸ்

24, A. பெரியகடை
யாழ்ப்பாணம்.

தற்கால நவீன டிசைன்களில்
ஆடவர் மகளிர் பிள்ளைகளுக்கேற்ற

★ பாட்டா
★ சின்வா
★ டி. எஸ். ஐ
★ எலாஸ்டோ

செருப்பு சப்பாத்து வகைகள்
மலிவான விலையில் பெற்றுக்
கொள்ள நம்பிக்கையான
ஸ்தாபனம்

லிங்கம் ஸ்ரூ பலஸ்

கண்டி வீதி,
சாவகச்சேரி.

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர்

## உயர்திரு இ. சிதம்பரப்பிள்ளை அவர்களின்

# ஆசிச் செய்தி

தென்னகத் தாரகை உறுப்பினர்கள் விளையாட்டுக் கலையில் கொண்டுள்ள தீவிர ஈடுபாடு காரணமாக ரசிகர்கள் மத்தியில் தொடர்ச்சியாக மதிப்புப் பெற்றுவந்தமை, விளையாட்டுக்கள்மூலம் உடல்திறன், மனச்சமநிலை காண விரும்பியவர்களின் பாராட்டுக்குரிய விடயம். சமீபகாலத்தில் இலக்கிய, நடனக்கலை வளர்ச்சியிலும் இம்மன்றத்தின் கவனம் திரும்பத் தொடங்கியது மேலும் ஒரு சமுதாய வளர்ச்சி அம்சம். இளைஞர்கள் மனம் வைத்தால் நாட்டுக்கு நல்லபணி ஆற்ற இயலும் என்பதை மேற்படி மன்றச் சாதனைகள் நிலைநாட்ட வேண்டுமென ஆசி கூறுகிறேன்.

சாவகச்சேரி.

**இ. சிதம்பரப்பிள்ளை**

உத்தரவாதமுள்ள

**தங்க வைர**

நகைகளுக்கு

**கே. எஸ். எம். மீரான் சாஹிப்**

தங்கப்பவுண் நகை மாளிகை

நகை வியாபாரம் யாழ்ப்பாணம்.

**அழகிய**

**பவுண் நகைகள்**

**தங்கப்பவுண்**

**வைரங்கள்**

கன்னாதிட்டி;

போன்; 585

தந்தி: மன்சூரு

---

# தாஜ்மஹால்ஸ்

21, நவீனசந்தை, யாழ்நகர்.

- அழகுசாதனப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- கோல்ட் கவரிங் நகைகள்

ஆகியவற்றிற்கு

சிறந்த ஸ்தாபனம்

# TAJMAHAL'S

**21, Model Market,**

**JAFFNA.**

---

- ஆண்கள்
- பெண்கள்
- சிறுவர்கள்

ஆகியோர்க்குரிய

## நவீன ஆடைகள்

றெடிமேடாகவும் ஆடருக்கும்

குறித்த தவணையில்

தைத்துக்கொள்ள

**விஜயம் செய்யுங்கள்**

பெஷன் ஸ்பொட்

# FASHION SPOT

**2A, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

சாவகச்சேரி நகராட்சிமன்ற விசேட ஆணையாளரும்,
யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான

## உயர்திரு. அன்ரன் அல்பிரெட்

அவர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி

சாவகச்சேரி தென்னகத்தாரகையின் 6-வது ஆண்டு விழாவையொட்டி இச்செய்தியை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

1972-ம் ஆண்டில் தோன்றிய "தென்னகத் தாரகை", விளையாட்டு, நடனம், நாடகம், இசை பேச்சு ஆகிய கலைகளிலும் தீவிர நாட்டப்கொண்டு உழைத்து வருவது, நல்ல சமுதாயத்துக்கு உறுதியான அத்திவாரமாக அமையும்.

சிறியோர்முதல் பெரியோர்வரை பயன்பெறும் வகையில் தென்னகத் தாரகையால் ஆரம்பிக்கப் பெற்றுத் திறமையாக இயங்கிக் கொண்டிருக்கும் சனசமூக நிலையம், இவ்வியக்கத்தினரின் தூய பணியைத் துலாம்பரமாகக் காட்டுகின்றது.

தென்னகத் தாரகையின் இனிய நோக்கங்கள் இலக்கை அடைய சாவகச்சேரிவாழ் மக்கள் ஒவ்வொருவரும் இவ்வியக்கத்தினருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டியது அவசியமாகும்.

தாரகை, துணிவுடன் நற்பணியைத் தொடர வேண்டுமென ஆசி கூறுகின்றேன்.

சாவகச்சேரி.

அன்ரன் அல்பிரெட்

தென்னகத்தாரகையின் நோக்கங்கள் வெற்றிபெற
எமது நல்லாசிகள்

# ஜீவனு ஸ்ருடியோ

கண்டி வீதி, சாவகச்சேரி

அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்கு
தகுந்த இடம்

KASTHURI
JEWELLERS

கஸ்தூரி ஜுவெல்லர்ஸ்

74/1, (184) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தென்னகத்தாரகையின் ஆண்டு
விழா சீராகவும் சிறப்பாகவும்
நடைபெற எமது
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்கிறோம்!

**K. K. Rajaratnam
Jewel House**

கே. கே. இராசரத்தினம்
நகை மாளிகை

129, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

சாவகசசேரி சுகாதார வைத்திய அதிகாரி
வைத்திய கலாநிதி

# திருமதி சாரதா சிவஞானவேல்

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரைகள்

தென்னகத் தாரகையின் ஆறாவது ஆண்டு விழாவுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் மனப்பூரிப்படைகிறேன்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி என்ற முறையில் இக்கழகம் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு ஆற்றும் பணியை இப்பகுதியில் பார்க்கும்போது, உள, சமூக, உடல் நலங்களில் முக்கிய கவனஞ்செலுத்தி, தேகாப்பியாசம், ஓட்டம் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், நடனக் கலை போன்றவற்றை ஊக்குவித்து, ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பதை வலுவூட்டி சுகாதார சேவைக்கு ஓர் பெரும் சமூகத்தொண்டினை தென்னகத் தாரகை ஆற்றுகின்றது.

தென்னகத் தாரகையின் சேவை தொடர்ந்தும் வளர எனது நல்வாழ்த்துக்கள்,

சாவகச்சேரி. சாரதா சிவஞானவேல்

★

*With Best Compliments*
*From*

# MODERN RADIO SERVICE

Technician: **T. S. THILAGARATNAM**
**A. M. I. E. T.**

KANDY Road, CHAVAKACHCHERI.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான

- கட்டிடப் பொருள்கள்
- விவசாய மருந்து வகைகள்
- விவசாய உரவகைகள்
- சாய்புச் சாமான்கள்

முதலியவற்றை மலிவாகப் பெற்றுக் கொள்ள

# சுல்தான்ஸ்

**சாவகச்சேரி**

**போன்:- 298**

உ
சிவமயம்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபரும்
தென்னகத் தாரகையின் காப்பாளர்களில் ஒருவருமான

## உயர்திரு. க. பாலச்சந்திரன் அவர்கள்

வாழ்த்தி வழங்கிய

# ஆசிச் செய்தி

தென்னகத் தாரகையின் ஆறுண்டுகள் பூர்த்தியடைந்து அறுவகைச் சுடர்களும் ஒருமித்த நிலையில் ஒளிவிட்டுப் பிரகாசித்து ஆண்டு மலரொன்று ஒருவாகும் நிலையை எண்ணும்போது ஆறுண்டுகளின் அளப்பரிய சாதனைகளைக் கண்குளிரக் கண்டு களிப்படைகின்றேன், இக்கழகம் இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழையும் ஒருங்கே வளர்ப்பதோடு உடற் கல்வியைச் செயல்முறைப்படுத்திச் சமூக முன்னேற்றத்திற்கான வழிவகைகளையும் வகுத்துவருவது பாராட்டுக்குரியதாகும்,

தென்னகத் தாரகையின் ஆண்டு மலருக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர் கமால் அவர்களின் சமரச நோக்கும், தமிழ்மொழிப் பற்றும் போற்றத்தக்கது. தலைவர் சமூகஜோதி மயில்வாகனம் அவர்களின் தாராள சிந்தையும், இரவு பகல் ஓயாது உழைக்கும் உத்தமச் செயலாளர் குஞ்சிதபாதம் அவர்களின் விடாமுயற்சியும் பராட்டப்பட வேண்டியன.

இக்கழகம் மேன்மேலுயர்ந்து மக்களுக்கான சேவையைத் தொடர்ந்து செய்ய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

க பாலச்சந்திரன்

## நிஹானீஸ்

72, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
கோல்ட் கவரிங் நகைகள்
சிறுபிள்ளைகளுக்கேற்ற
விளையாட்டுச் சாமான்கள்
ஆகியவற்றிற்குச் சிறந்த ஸ்தாபனம்

## NIHARNEES

72- MODEL MARKET
**JAFFNA**

எப்பொழுதும் நீங்கள்
விரும்பும்

**தங்க வைர நகைகளை**
**திருப்தியுடன் பெறுவதற்கு**
**உகந்த இடம்**

## ராணி
## ஆபரண மாளிகை

63, கன்னாதிட்டி,
**R. G. பில்டிங்**
யாழ்ப்பாணம்.
தொலைபேசி;- 7544.

*With the Best Compliments of:*

## M.M. Abdul Cader & Bros

Direct Importers & Dealers in Hardware & Brassware Goods

WHOLESALE & RETAIL MERCHANTS

**No. 97, K. K. S. Road** **JAFFNA**

Cable: **"IRUMBU"** **Telephone: 443 [EXT]**

மத்திய மாகாணச் சைவ மகாசபை இணைச் செயலாளர்

## உயர்திரு நா. மகாலிங்கம் அவர்களின்

# ஆசிச் செய்தி

தென்மராட்சியில் இளைஞர்கள் மத்தியிலே தேவை தெரிந்து விளையாட்டு, சமூகசேவை; கலை வளர்ச்சி என முத்துறைகளில் மகத்தான சேவை செய்து நிலவிக்கொண்டிருக்கும், தென்னகத் தாரகை 6-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வமயத்தில், தொடர்த்து பன்னெடுங்காலம் மேலும் பலதுறைகளில் சமூகப்பணி புரிந்து தொண்டாற்ற, எல்லாம்வல்ல இறைவன் திருவருளை வேண்டுகின்றேன் வாழ்த்துகின்றேன்.

138, பேராதனை விதி,
கண்டி.

நா. மகாலிங்கம்

**தென்மராட்சி மக்களின் நீண்ட நாள் ஆவலைப்**
**பூர்த்தி செய்கிறோம்**

*காலையில்*

சிறந்த அப்பத்தை கனிந்த பழத்துடன் உருசி பார்த்திடவும்:

*மதியம்*

தரமான ரொட்டி, பிட்டு, வகைகளை திறமான ரேஸ்டுடன்
உண்டுதிளைத்திடவும்

*மாலையில்*

சுத்தமான சிற்றுண்டி, இனிப்பு வகைகளை சுவை மிக்க டீயுடன்
சுவைத்து மகிழ்ந்திடவும்

## எம்மிடம் விஜயம் செய்யுங்கள்

# ஜிப்ரி ரீ றூம்

# JIFFRY TEA ROOM

பள்ளிவாசல் கட்டிடம்

தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

உணவு வகைகளும், சிற்றுண்டி இனிப்பு வகைகளும் ஓடருக்கு,
கைதேர்ந்தவர்களால் சுத்தமாகவும் சுவையாகவும் செய்து கொடுக்கப்படும்
சுவையை அறிய ஒருமுறைவிஜயம் செய்யுங்கள்
தினமும் காலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரை உங்கள் வரவை எதிர்பார்த்திருக்கிறோம்

சாவகச்சேரி வி. எம். கே. தங்கமாளிகை உரிமையாளரும்
தென்னகத் தாரகையின் காப்பாளர்களில் ஒருவருமாகிய

## உயர்திரு. வீ. எம். கணபதிப்பிள்ளை அவர்களின்

# ஆசிச் செய்தி

ஒரு நாட்டின் எதிர்காலப் பிரசைகளான இன்றைய இளைஞர்கள் சமூகத்துக்கும், நாட்டுக்கும் பயனுள்ளவர்களாக வேண்டுமானால் அதற்கேற்ற முறையில் அவர்களது இன்றைய வாழ்க்கை அமையவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு இன்றைய இளைஞர்களுக்குச் சிறந்த பொழுது போக்கு வசதிகளை அளித்து இளைஞர்களின் ஆற்றல்களை நல்வழிப்படுத்துகின்ற தென்னகத் தாரகையின் பணி பெரிதும் பாராட்டப்படவேண்டியதாகும்.

விளையாட்டுக் கழகம், சனசமூக நிலையம், கலாமன்றம் ஆகிய சிறந்த பொழுதுபோக்கு வசதிகள் மூலம் இளைஞர்களை நல்வழிப்படுத்துகின்ற தென்னகத் தாரகையின் பணிகள் இன்னும் வளர்ச்சியடைந்து பரவலாக்கப்பட வேண்டுமென்று விரும்பி எனது நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

சாவகச்சேரி. வீ. எம். கணபதிப்பிள்ளை

✶

With the best compliments

Of

# A. K. S. & Sons

## Jewel House

★ Lovely ★ Lively ★ Fashion Jewellery

68, Kannathiddy

JAFFNA.

Dail: 519

*Space Donated by*

# R. P. N. RICE MILL

Kandy Road, Chavakachcheri.

தென்னகத் தாரகையின் காப்பாளர்களில் ஒருவரான

## ஜனுப் V. முத்துராஜா அவர்களின்

# ஆசிச் செய்தி

தனது 6வது ஆண்டு விழாவைக் குதூகல மாகக் கொண்டாடும் தென்னகத் தாரகைக்கு எனது நல்லாசியை வழங்குவதில் பெருமையடை கிறேன்.

விளையாட்டுக் கழகமாக உருவாக்கப்பட்ட தென்னகத் தாரகை, இன்று சமூக முன்னேற்றத் துக்குத் தேவையான சகல துறைகளிலும் தனது பார்வையைத் திருப்பி சமூகத்தில் ஒளிமயமான எதிர்காலத்தை எம் கண்முன் சிருஷ்டிக்கிறது.

இந்த எதிர்காலம், சாதி, இன மத பேதமற்ற ஒரு உன்னத நோக்குடன் கூடிய ஒரு நவீன சமூக அமைப்பை உருவாக்கும் என்பது திண்ணம். அவ் விதமான அமைப்பை இப்படியான உன்னத கழ கங்களினூற்றான் விளையாட்டு மைதானங்களிலும் சனசமூக நிலையங்களிலும், நாட்டிய - நாடக மேடைகளிலும் கட்டியெழுப்ப முடியும்.

அச்சீரிய பணிக்கான பங்கை, தென்னகத் தாரகை முழுமையாக வழங்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் எனது நல்லாசிகளை வழங்குகிறேன்.

சாவகச்சேரி. **V. முத்துராஜா**

★

★ சிறந்த
பழவகைகளுக்கும்
★ சுவையான
சிற்றுண்டி வகைகளுக்கும்
★ குளிரான
பான வகைகளுக்கும்

விஜயம் செய்யுங்கள்

**மோகன் மில்க் பார்**

பஸ் நிலையம், சாவகச்சேரி.

உரிமையாளர் S. தர்மலிங்கம்

டிரக்ரர்களுக்கான

துலாக்கள்

கப்புகள்

விற்பனைக்குண்டு

தொடர்பு கொள்ளுங்கள்

**" ஸ்ரார் "**

❋ ❋ ❋

233, ஸ்ரான்லி வீதி,
[வெலிங்டன் சந்தி]
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7352

O பிரிண்டெட் பெப்பிரிக்
O சூட்டிங்
O சேட்டிங்

பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும்
ஏற்ற
றெடிமேட் உடைகளை
குறைந்த விலையில் வாங்கச்
சிறந்த ஸ்தாபனம்

**குறைஸ்**
**ரெக்ஸ்ரைல்ஸ்**

E. B. 2 மார்க்கட் சாவகச்சேரி.

தற்கால நவநாகரீகத்திற்கேற்ப
தையல் வேலைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

**ஹுசைன் ரெயிலறிங்**

நம் 21 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**HUSAIN
TAILORING**

சாவகச்சேரி தெற்கு கிராமசேவையாளர்

## உயர்திரு. தம்பிராசா இரத்தினராசா

அவர்களின்

# ஆசிச் செய்தி

**ஆ**றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தென்னகத் தாரகையின் துரித வளர்ச்சி கண்டு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

விளையாட்டுத்துறையை வித்தாகக் கொண்டு அரும்பிய தென்னகத் தாரகை, இன்று நடனாலயம் சனசமூக நிலையம், நாடக மன்றம் ஆகிய கிளைகள் பரப்பி, ஊக்கமுடன் உழைத்துவரும் வெற்றி போற்றுதற்குரியது. எனது பிரிவில் இயங்கி வருகின்றபோதிலும் 'தென்னகத் தாரகை' சாவகச்சேரிக்கே உரிய முதுசொத்து.

தாரகையின் ஒளிக்கரத்தால், இருள்மண்டிக் கிடக்கும் இடமெல்லாம் பிரகாசிக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

வாழ்க தாரகை! வளர்க அதன்பணி!!

சாவகச்சேரி.

த. இரத்தினராசா

✶

நவநாகரீகமான தையல் வேலைகட்கு
நீங்கள் என்றும்
மனதில் வைத்திருக்கவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

சிமக்ஸ்

SMACS
TAILORS

மொஸ்க் லேன், யாழ்ப்பாணம்.

தரமான ஆட்டிறைச்சி
வேண்டுமா?

இன்றே விஜயம் செய்யுங்கள்

V. M. M. ரஜப்

நீண்டகால சேவை மூலம்
மக்கள் மத்தியில் நம்பிக்கை
பெற்றவர்கள்''

No 1 ஆட்டிறைச்சிக் கடை
மார்க்கட். சாவகச்சேரி,

எமது உளங்கனிந்த
வாழ்த்துக்கள்

ராஜா ஸ்ரோர்ஸ்

பலசரக்குக் கடை

C. S. 2. மார்க்கட்,
சாவகச்சேரி.

உரிமையாளர்; வை. நடராசா

ரஞ்சனாஸ்

நவின சந்தை சாவகச்சேரி
திருமண வைபவங்களுக்கேற்ற

சேலை வகைகள்
சேட்டிங்
சூட்டிங்

வகைகளும் பெற்றுக்
கொள்ளலாம்

Ranjanas

NEW MARKET Chavakachcheri



உ

தமிழ் வாழ்க

# தென்னகத் தாரகையின்

## ஆருவதாண்டு மலர் அழகுற மலரட்டும்

சைவமணி, வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள்

தென்னகத்துத் தாரகையே, தேன்பொலிந்த புத்தமுதே
உன்னகத்தே ஒளிர்கின்ற ஒப்பரிய இலட்சியத்தை
மண்ணகத்தே பரப்பிடவே மாண்புநிறை மலரதனை
விண்ணகத்தோர் வியப்புறவே விரும்பியெமக் களித்தனையே

ஒப்பரிய மலர்தன்னால் உலகனைத்தும் ஒளியூட்ட
செப்பரிய செந்தமிழில் தேன்கலந்து தெவிட்டாமல்
தப்பரிய இலட்சியத்தை தாங்கிவருந் தாரகையே
ஒப்பிலா உன்பணியை உவந்தென்றும் வாழ்த்துவமே.



# ஆசிரியர் கருத்துரை.........

**ஏ. எம். கமால்**
(மலர் ஆசிரியர்)

தென்னகத்தாரகை தனது 6வது ஆண்டு விழாவைக் குதூகலமாகக் கொண்டாடும் வேளைதனில் - இம் முதலாவது மலரை உங்கள்முன் சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றோம். ஒரு தனிப்பட்ட நபரின் அல்லது ஒருசிலரின் சாதனையில் பிறந்ததல்ல இந்த மலர். ஒரு சரியான இயக்கத்தின் உண்மை நேர்மை பயமின்மை என்ற அடிப்படைக் கோட்பாட்டின் பிரதிபலிப்பே இந்த மலரின் வரலாறு. தனிப்பட்ட நபரின் ஆசையில் ஆரம்பிக்கப்படும் எந்தஒரு விஷயமும் வரலாற்றில் ஒரு சாதனையை ஏற்படுத்தியதில்லை. ஈற்றில் அவை காட்டாற்றினுல் அள்ளிச்செல்லப்படும். சரியான ஒரு கூட்டு முயற்சியின் வேலைத்திட்டங்கள் ஒருபோதும் வீண்போவதில்லை. அப்படி ஒரு கூட்டு முயற்சியின் பலனுற் பிறந்த மலர் என்னும் இக்குழந்தையைப் பிரசவிக்க, எமது கழகமென்னும் தாய் பெற்ற வேதனைகள் பல தரப்பட்டன. ஆனுல் மக்கள் என்னும் மருத்துவிச்சியின் தளராத சேவையினுல் இன்று இக்குழந்தை நலமுடன் உங்கள் கைகளிற் தவழ்கின்றது. ஈன்றெடுத்த பூரிப்புடன் தென்னகத்தாரகை மங்கை நல்லாள் கடந்தகாலக் கஷ்டங்களை மறந்து கண்சிமிட்டுகிருள்.

எமது கழகம் நீரில் வாழும் மீனுகவே மக்கள் மத்தியில் என்றும் இயங்கிவந்துள்ளது. இனியும் இயங்கிவரும்.

நீரில் இருந்து விலகிப் பெருந்தன்மையுடன் கரையில் வாழும் எண்ணம் என்றும எமக்கு ஏற்பட்டதுமில்லை; ஏற்படப்போவதுமில்லை. ஏனெனில் நீரைவிட்டுக் கரையேறிய மீன்களின் கதை எமக்குத் தெரியும். இக்கோட்பாடு கழகத்துக்கும், அதன் அங்கத்தவர்களுக்கும்கூட மிகவும் பொருந்தும்.

எமது கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளாகியும் 5 ஆண்டு விழாக்கள் கடந்துசென்ற போதிலும், இவ்வருடம் தான் முதன்முதலாக ஒருமலரை வெளியிடும் வாய்ப்பு எமக்குக் கிட்டியுள்ளது.



இப்பணியின் ஆக்கவேலைகளுக்கு அதிக நிதியுதவி தேவைப்பட்டதால், தேவையின் சிறுபகுதியை கழகத்தின் அங்கத்தவர்கள் பகிர்ந்துகொண்ட போதிலும், தேவையின் பெரும்பகுதிக்கான கோரிக்கை மக்கள்முன் வைக்கப்பட்டது. கழகத்தின் அன்பான வேண்டுகோளின் பயனாக தென்மராட்சி வாழ் பெருங்குடிமக்களும் வர்த்தகப் பெருமக்களும் நன்கொடைகளாகவும், விளம்பரங்களாகவும் நிதியுதவியளித்தனர். அதே போல் யாழ்நகர வர்த்தகப் பெருமக்களும் நண்பர்களும் எமக்களித்த நன்கொடையுதவி, விளம்பர உதவி ஆகியன இங்கு மீண்டும் நினைவுகூரத்தக்கவை. அதேசமயம் சில இடங்களில் எமக்குக்கிடைத்த கசப்பான அனுபவங்களையும் என்னால் இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. ஆனால் அதனால் யாம்பெற்ற உணர்ச்சிகளைக் கடும் முயற்சிகளாக மாற்றிப் பணியை முன்னெடுத்துச் சென்றோம். அதன்மூலம் குறுகிய காலத்திலும் துரிதமாக எம்மால் இம்மலரை உருவாக்கமுடிந்தது.

விசேடமாக இம்மலரில் கட்டுரை, கவிதை ஆகிய அம்சங்களுக்கு முக்கிய இடமளித்துள்ளோம். அநேக கட்டுரைகள் எமது கழகத்தின் அடிப்படை நோக்கங்களைக் கருப்பொருளாகக் கொண்டு வரையப்பட்டுள்ளன. மலர்க்குழுவால் தெரிவுசெய்யப்பட்ட ''கண்சிமிட்டும் தாரகையே'' என்னும் தலையங்கத்தின்கீழ் கவிதை புனைந்தனுப்பும்படி சிலகவிஞர்களைக்கேட்டிருந்தோம். அத்தகைய வேண்டுகோளில் சில வட, கிழக்குமாகாணக் கவிஞர்களுக்கு விடுக்கப்பட்டது. அவர்கள் சிலரால் யாத்து அனுப்பப்பட்ட அழகுக் கவிதைகள் மேற்படி தலையங்கத்தின் கீழ் உள்ளே பிரசுரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக விடயதானங்களிற் பெரும்பகுதி எமதுபகுதி எழுத்தாளர்களிடமிருந்தே பெறப்பட்டுள்ளன. அதுவே பொருத்தமானதும்கூட என்பது எமது தாழ்மையான கருத்து.

சிறப்பாக மலரின் ஆசிரியனாக யான் கடமையேற்ற போதிலும், மலரைச் சிறந்த முறையில் உருவாக்கும் முயற்சியில், கழகத்தின் சகல அங்கத்தவர்களும் என்னோடு தோளோடு தோள்நின்று ஒத்துழைத்தனர். குறிப்பாக எமதுகழகப் பொதுச் செயலாளர் திரு.வி. சி. குஞ்சிதபாதம் அவர்கள் மலருக்கான சகலதுறைகளிலும் இரவுபகல்பாராது ஆற்றிய சேவையையும், ஆசிரியரும் கழகத்தின் ஓவியருமான திரு. நா. முத்தாலிங்கம் அவர்கள் மலர்சம்பந்தமாக எமக்களித்த ஆலோசனைகளையும் அவரது அட்டைப்படக் கைவண்ணத்தையும் சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் மலர் சம்பந்தமான நுணுக்கங்களை எமக்குத் தெளிவுபடுத்தியதுடன், மலர்கோப்புக்கான ஆலோசகராகத் துணைபுரிந்ததோடு, அச்சகத்தில் மலர் ஒழுங்குக்கான மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய பெருமையையும் இங்கு நன்றியறிதலுடன் நினைவுகூருகிறேன்; புகழ் கொள்ளா மனநிலையோடு இவர்கள் இதனை விரும்பாவிடினும் இது எனதுபக்கம் என்ற படியால் மறுப்பேதுமிருக்கமுடியாது என நம்புகிறேன்.

எல்லோரையும் திருப்திசெய்ய விழைபவன் ஈற்றில் ஒருவரைக்கூட திருப்திசெய்யத் தவறுகிறான் என்பது பொதுவிதி· அவ்விதிப்படி எல்லோரையும் எம்மால் திருப்திப்படுத்த முடியாது. இது எமது கன்னி முயற்சி. மிகக் குறுகியகால முயற்சியாகையால் இந்த விடயத்தில் நாம் பூரணவெற்றி அடைந்ததாகக் கூறமுடியாது. இதில் பல குறைநிறை சுவையின்மை போன்ற தன்மைகள் இருக்கலாம். அவைகளை ஜீரணிக்கு மாறு நீதிபதிகளாகிய மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். இம்மலர்மூலம் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் நிச்சயமாக அடுத்த மலருக்கு உரமாக அமையும். அடுத்த ஆண்டு மலர் சகலவிடயங்களிலும் பூரணத்துவம் பெற்ற மலராக மலரும் என நம்புகிறோம். வெறும் தத்துவங்களோடும் போதனைகளோடும் அமையாது, சமூகத்தில் பிரச்சனைகளைக் கோடிட்டுக்காட்டி அவைகளைத் தீர்ப்பதற்காய மார்க்கத்தைக் காட்டும் விடயங்களைத் தாங்கியதாக மலரட்டும். அதற்காய நம்பிக்கை விதையை உங்கள் உள்ளங்களில் இப்பொழுதே விதைக்கிறோம். இந்தவிதைப்பின் அறுவடை கழகத்தின் எதிர்காலச் சாதனையாக அமையட்டும்.

★



# தலைவர் கருத்து

சமூகஜோதி எஸ். கே. மயில்வாகனம்

மானிடப் பிறவியெடுத்த ஒவ்வொருவரும் தாம் பிறவியெடுத்ததன் மகத்துவத்தை மனதிற்கொண்டு செயற்பட்டால் சாதி, மத பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர்களாவோம்.

எந்தஒரு நாட்டு மக்களுக்கும் தனித்துவமான பணியுண்டு. அது மொழியாகஇருக்கலாம், கலையாக இருக்கலாம், கலாச்சாரமாக இருக்கலாம், அறிவாக இருக்கலாம், சமூக சேவையாக இருக்கலாம். இவையாவும் இதயத்தில் பதிக்கப்பட்ட உதிரமாகக் கொண்டு பணியாற்றின் நாட்டில் நிலவும் சகல பிரச்சினைகளும் தீருமென்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் அனைவரும் வீரஉள்ளம் கோண்ட விடுதலைவேட்கை கொண்ட ஒரு சுதந்திர சமுதாயத்தை உருவாக்க அயராது உழைக்கவேண்டியது அவசியமாகும்.

இப்பணியில் உணர்ச்சியுள்ள பல பெரியோர்களினுலும், இளைஞர்களினுலும் 5 ஆண்டுகளுக்குமுன்பு விளையாட்டுக்கழகமாக ஆரம்பிக்கப்பெற்ற தென்னகத் தாரகை தனது ஐந்தாண்டு காலத்திற்குள் கலை, கலாச்சாரத்தையும் வளர்க்கும் ஒரு ஸ்தாபனமாக வளர்ச்சிபெற்று 6வது ஆண்டு விழாவை தென்னகத்தாரகை சனசமூகநிலையம் என்ற நாமத்துடன் கொண்டாடும் நிலைக்கு தன்னை ஆக்கிக்கொண்டது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியதாகும்.

இத்தகைய பெருமை தென்னகத் தாரகைக்குத் தேடிக்கொடுத்த பொதுமக்களும் கழக உறுப்பினர்களும் அத்துடன் நின்றுவிடாது மலரை வெளியிடுவதற்கும் தமது பூரண ஒத்துழைப்பை நல்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். மலர் வெளியீட்டுக்கு சமூகப் பெரியார்களும், பொதுஸ்தாபனங்களும் வர்த்தக நிலையங்களும் ஆசிச்செய்திகளையும், கவிதை, கட்டுரைகளையும் வழங்கி மலரை மேலும் அலங்கரித்தமைக்கு தலைவர் என்ற முறையில் மிகவும் பெருமைப்படுவதுடன் எனது இதயபூர்வமான நன்றியையும் சமர்ப்பிக்கின்றேன்.

# பொதுச் செயலாளரின் நோக்கில் தாரகையின் போக்கு.



1972ஆம் வருடம் தைத்திங்கள் 23ஆம் நாள். ஆம் அது ஓர் நன் நாள். சாவகச்சேரியைப் பொறுத்த மட்டில் அது ஒரு பொன்நாளும் கூட. அந்த நாளிற்ருன் எமதுஉப பொதுச்செயலாளர் திரு. இ. சண்முகலிங்கம் அவர்களால் ''தென்னகத் தாரகை''எனப் பெயரிடப் பெற்ற எமது விளையாட்டுக்கழகம் மஞ்சள், நீலம் ஆகிய வர்ணக் கொடியின் கீழ் ஆரம்பிக்கப்பெற்றது.

அறுவருடன் ஆரம்பிக்கப் பெற்ற தென்னகத் தாரகையின் உறுப்பினர்தொகை நாளடைவில் பல்கிப் பெருகின. விளையாட்டுக் கழகத்துக்குரிய உபகரணங்கள் இல்லாமை, கழக உறுப்பினர்களிடையே உள்ள உற்சாகத்தைக் குன்றச்செய்தது. அக்குறைவை நிறைவாக்கும் நோக்குடன் ஈழத்துத் தமிழ்நாடக உலகில் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றுள்ள ''சுண்டிக்குழியாழ். நாடகக் கலாமன்றத் தலைவரை அணுகி விடயத்தை விளக்கியகாலை பெருமனதுடன் அவர்தம் நாடக மன்றத்தின் ''அடங்காப் பிடாரியை'' இலவசமாக மேடையேற்றி நிதிசேர்க்க வழிவகுத்துத் தந்தார். சாவகச்சேரி இளம் வானம்பாடிகள் அளித்துதவிய இசைவிருந்தும் ஈண்டு குறிப்பிடப்படவேண்டியதாகும். சேர்ந்த நிதி எமது நோக்கம் ஆக்கம்பெறப் பெரிதும் உதவியது.

''தென்னகத் தாரகை விளையாட்டுத் துறையிற் கொண்ட ஈடுபாடு காரணமாக சாதி மத, இனபேதமோ, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேற்றுமையோ இன்றிச் சேர்ந்த உறுப்பினர்களிடையே வளர்ந்த சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன சாவகச்சேரியில் விளையாட்டுத் துறையில் சாதனைகளை நிலைநாட்டிச் சரித்திரம் சமைத்தது.

''உறுதிபெற்ற உடலிலே உயர்ந்த சிந்தனை உருவாகும்'' என்ற உரிமையை உறுப்பினர்கள் உணரத் தலைப்பட்டனர். வெற்றியையும் தோல்வியையும் சம்மாக்வே மதிக்கும் மனப்பண்பு மலர்ந்தது. விட்டுக்கொடுக்கும்தன்மை விரிவடைந்தது.

விளையாட்டுத் துறையில் வீறுநடை போட்ட தென்னகத் தாரகையின் புதிய நிர்வாகம் 1976ஆம் வருடம் வைகாசி மாதத்திற் பொறுப்பேற்றதிலிருந்து கிளைகள்பல முளைவிடத் தொடங்கின. அக்கிளைகளில் ஒன்றான நடனஆலயம் 18 மாணவ மாணவிகளுடன் தடைகள்பல தாண்டித் திடமுடன் முன்னேறி வருகின்றது.



அடங்காப்பிடாரி

அறிவுப்பசி போக்க ஆலயம் அமைக்கவேண்டுமென அங்கத்தவர்கள் ஆர்வம் கொண்டனர். அதன்பலன் வலதுகை கொடுத்ததை இடதுகை அறியாது வாரி வழங்கும் வள்ளல்களான திருவாளர்கள் வி. எம். கணபதிப்பிள்ளை, ஏ. கே. சுந்தரம் வைத்தியமணி V. சின்னப்பு, வைத்தியமணி பே. பிலிப்ஸ் இ. மகேந்திரன், எம். ரி. சுப்பிரமணியம், எம். விவேகானந்தன், வே. சங்கரலிங்கம் ஆகியோரைநாடிச் சென்றோம். இன்முகங்காட்டி இருக்கைதந்து இதயங்கோணாது பணஉதவி செய்தனர். தென்னகத் தாரகையின் பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் பாத்திரமான பெரியார் திரு. நா. மகாலிங்கம் அவர்களால் வழங்கப்பெற்ற காணியில் கட்டடம் எழுந்தது. வெண்ணை திரள்கையில் தாழி உடைந்தது போல கட்டிட நிருமாணப் பொறுப்பாளர்களிடையே கட்டிடத்துக்குப் பெயரிடும் விடயத்தில், இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட கொள்கை வேறுபாடு காரணத்தால் ''தென்னகத் தாரகை கட்டிடத்தை விட்டகல வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த ஏமாற்றம் கலைக்கோயில் அமைக்கவேண்டுமென்ற அங்கத்தவர்களின் ஆவலை ஆல்போற் தழைக்கவைத்தது. அதன் பிரதிபலிப்பால் இன்று வாடகைக் கட்டிடத்தில் தென்னகத் தாரகை, சனசமூக நிலையத்தை இயக்கிக் கொண்டிருக்கின்றது. மிக விரைவில் ''தென்னகத் தாரகைக்கென''ச் சொந்தமாக ஒரு நிலம் பெறப்பட வேண்டும். கட்டடம் அமைக்கப்படவேண்டும், சனசமூகநிலையம் நடாத்தப்பெறவேண்டும் எனக்கனவு காண்கின்றோம். எமது கனவு நனவாக, அதன்மூலம் மக்களின் அறிவுப்பசிக்கு அமுதூட்ட, தகுதிக்கேற்பத் தாராளமாக வாரி வழங்கப் பொது மக்கள் என்றும் பின்நிற்கமாட்டார்களென எண்ணுகின்றோம். ஏற்கனவே முன்கூறியவர்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தைக்கொண்டு சனசமூக நிலையத்திற்கு வேண்டிய தளபாடங்களைச் செய்விக்க எண்ணியுள்ளோம்.

தென்னகத்தாரகை, வாழ்வின் அடித்தளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் நிலையில் இறங்கிநின்றே பணிபுரிய விழைகின்றது. சமூகத்திற் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதுடன் நின்றுவிடாது, அத்தவறுகள் ஏற்படுவதற்குரிய அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து, அத்தவறுகளைத் தவிர்ப்பதற்கான மார்க்கங்களையும் உணர்த்தும் வகையில் தென்னகத் தாரகை மிளிரும் என்பதில் ஐயமில்லை.

பேச்சுக்கலையின் பெருமையறிந்து 6வது ஆண்டுவிழாவையொட்டி, தென்மராட்சிரீதியில் ஆண், பெண் ஆகிய இரு பிரிவினர்க்கும் தனித்தனி பேச்சுப் போட்டியை முதல் முறையாக் நடாத்தி வெற்றியும் பெற்றுள்ளோம். தொடர்ந்து எதிர்காலத்தில் இயலுடன் இசை, நாடகம் ஆகிய துறைகளிலும் போட்டிகள் நடாத்தி முத்தமிழுக்கும் முழுமையாக ஊக்கம் கொடுக்கும் திட்டத்தைத் தாரகை தன்னகத்தே கொண்டுள்ளது.

தென்னகத் தாரகையின் பிறிதோர் கிளையான நாடகமன்றம் மிக விரைவில் தனது முதலாவது நாடகத்தை மேடையேற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. பொழுதுபோக்குக் கலையாக் நாடகத்தை நடத்துவது, மலட்டுப் பசுவை வளர்ப்பதற்கொப்பாகும். மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையிலேயே நாடகங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற கொள்கைப் பிடிப்புடன் இயங்கும் தென்னகத் தாரகையின் நாடகங்கள் நிச்சயமாக மக்கள் மத்தியில் மகத்தான மதிப்பைப் பெறுமென எண்ணுகின்றோம்.

1977ஆம் வருட முற்பகுதியில் எமது கழகத்தால் முப்பிரிவுகளாக மின்னொளியில் நடாத்தப்பெற்ற கரபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் வெற்றிபெற்றோர்க்கு வழங்கும்பொருட்டு யாழ். றிக்கோ ஹோட்டல் ஸ்தாபனம், யாழ். ரோமு ஸ்தாபனம், சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊழியர் மன்றம் ஆகியவை பெறுமதி வாய்ந்த வெற்றிக்கேடயங்களையும், - யாழ். றீகல் சவுண்ட் சேவிஸ் உரிமையாளர், திரு. து. ரூபசிங்கம், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முதலாம்கிளை முகாமையாளர் திரு. வி.ஆர் ஜெயகுமார் ஆகியோர் தரமான வெற்றிக் கிண்ணங்களையும் நன்கொடையாக வழங்கி விளையாட்டின் மகத்துவத்துக்கு மதிப்பளித்தனர்.

தென்னகத் தாரகையின் ஆக்க பூர்வமான அத்தனை நடவடிக்கைகளுக்கும் தமது பேராதரவையும், ஒத்துழைப்பையும் நல்கியோர் வரிசையில் சாவகச்சேரி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் திரு. சி. இராஜநாயகம், சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. கே. நடராசா, சாவகச்சேரி, முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் தர்மகர்த்தா சபை உறுப்பினர் ஜனாப் வி.முத்துராசா ஆகியோர் முதலிடம் வகிக்கின்றனர். அவர்தம் ஆதரவையும் ஒத்துழைப்பையும், ஆலோசனைகளையும் தென்னகத்தாரகை என்றென்றும் வேண்டிநிற்கின்றது.

தென்னகத் தாரகையின் உயர்வுக்கு உறுதுணையாக இருந்த, இருக்கின்ற சாவகச்சேரி காவல்துறை அதிபர்களான திரு. டி. எஸ். மிராண்டா, திரு. என். கதிர்காமநாதன், திரு. விக்டர் டி. அல்விஸ் ஆகியோருட்பட, சாவகச்சேரி காவல்துறை உத்தியோகத்தர்கள் அனைவரும் எழுச்சிகொள் தாரகையின் வளர்ச்சியின் பங்குதாரர்கள் என்பதைத் தெரியத்தருவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் முன்னுள் நகரபிதா, உறுப்பினர்கள் தொடர்ந்து கடமை புரிந்த, புரியும் விசேட ஆணையாளர்கள், செயலாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் தாரகையின் வளர்ச்சிக்கு, முழுமனதுடன் நல்கிய ஒத்துழைப்புக்களும், சேவைகளும் தென்னகத் தாரகையின் இதயம் விட்டு என்றுமே அகலாத வெற்றி பெற்றுள்ளது.

கலைவண்ணம் மிளிரக் கைவண்ணம் காட்டும் தென்னகத் தாரகையின் உறுப்பினரும் ஓவியக் கலைஞருமான திரு. நா. முத்தாலிங்கம் அவர்களின் தன்னலமற்றச் சேவையை தாரகை தக்கமுறையிற் பயன்படுத்தவுள்ளது. சித்தரகூடமமைத்து, ஓவியவகுப்புகளை நாடத்த வேண்டுமென்ற தென்னகத் தாரகையின் தெளிந்த நல்லெண்ணம் ஈடேற சாவகச்சேரி வாழ் மக்களின் முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்குமென்ற நம்பிக்கை நமக்குண்டு. மேலும் பாலர் பாடசாலை, இசை வகுப்பு, மிருதங்க வகுப்பு, தையல் வகுப்பு ஆகிய இன்னோரன்னவற்றையும் எதிர்காலத்தில் ஆரம்பித்து நடாத்துதற்குரிய நடவடிக்கைகளைத் தாரகை எடுக்கத் தயங்காது என்பது உறுதி.

தென்னகத் தாரகையெனும் வளமிக்க வயலில் களைபிடுங்கும் கைங்கரியத்தைக் கழகம் என்றுமே செய்யத்தவறுது. நெல்லுக்கிட்ட உரத்தை உறுஞ்சி எடுக்கும் புல்லைப் பிடுங்கும்போது தவறுதலாக அருகில் நிற்கும் நெல்லும் சேர்ந்து பிடுங்கப் பட்டுவிடுகின்றது. அங்ஙனம் தவறுதலாகப் பிடுங்கப்படும் நெல்லை, தன்மை கெடாதிருக்கும் பட்சத்தில் திரும்பவும் வயலில் நாட்டநாம் என்றும் தயாராயுள்ளோம்.

ஈற்றில், எல்லோரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தப்பெற்று— இல்லாரும் உள்ளாரும் இல்லாத சமத்துவ சமுதாயத்தைச் சமைக்கும் பணியில் தென்னகத் தாரகை திண்மையுடன் செயல்புரியுமெனத் திடமாக நம்பலாம்.

வி. சி. குஞ்சிதபாதம்
பொதுச் செயலாளர்
தென்னகத் தாரகை

# புகைத்தலை விலக்குக

புகையும் அனல்கௌவும் புன்தொழிலாளர் வாழ்க்கை
வகையின்றி வாழ்ந்து கெடும்

கொன்று பிணமாக்குங் கூற்றின் கொடிதாகும்
புற்று நோய்க் கன்னை புகை

பெருமையென் றெண்ணிப் புகையருந்தும் பேதை
சிறுமை யடையும் சிதைந்து

நலிந்துயிர் வாடினும் நாடிப் புகையை
வலிந்துண்பார் வன்மை பெரிது

எனைத் துயர்ந்த சீர்த்திய ரேனுமஃ தென்னும்
புகைத்தொழியும் புன்மை கொளின்.

# ஓவியக்கலை



சிந்தனையும் செயலாற்றும் திறமையும் ஒருங்கே அடைந்த மனிதன் தனக்கென்ப் பல கவின் கலைகளை வகுத்துக்கொண்டான். அவைகளில் ஒன்று ஓவியக்கலை. இது கலைகளில் தலையாயது, காலத்தைக் காட்டுவது. கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இன்பம் தருவது, மனதுக்கும் அடங்காத கற்பனைகளை வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு பின்னி, உணர்ச்சியெனும் புனலில் அவற்றை நனைத் தெடுத்து, அருமையான ஓவியங்களாக யாத்து வரண்ட உள்ளங்களை வளப்படுத்துகின்றான் ஓவியக் கலைஞன்.

கவின் என்னும் சொல்லிற்கு ''தன்பால் இழுத்தல்'' என்பதே சிறந்த பொருள்.

சிறந்த ஓவியங்கள் ஒவ்வொன்றிற்கும் இப்பண்பு உண்டு. அதுவே நம் நெஞ்சை யள்ளும் பண்பு. தித்திக்கும் தெள்ளமுதெனத்திகழும் நம்நாட்டு ஓவியங்கள் சில மண்டிக்கிடக்கின்றன. பொருள் ஆழமும், கற்பனை வளமும் லயஓட்டமும் மிகுந்த ஓவியங்கள் சிலவற்றை இப்பொழுதும் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. ஓவியம் என்பது கண்ணாடி அறையிலே பூட்டிவைக்

நா. முத்தாலிங்கம் (ஓவிய ஆசிரியர்)

ஓவியம் என்பது ஒரு பெரிய களஞ்சியம். அளவற்ற பொருள் வகைகள் நிறைந்த அருமையான நிதி; பார்க்கும் தோறும் பார்க்கும் தோறும் இன்பம் சுரக்கும் அமுத ஊற்று, அன்றாட வாழ்க்கையில் அகப்பட்டு அகமும் புறமும் புண்பட்டு அல்லலுறும் நெஞ்சிற்கு இன்பமும் அமைதியும் தரும் அருமருந்து. கலைகளின் உயிர்நிலைப்பகுதியே கவின் கலையாகிய ஓவியமாம். கவின் என்னும் சொல்லிற்கு அழகு, சிறப்பு, சித்திரம் என்ற பொருள்களுமுண்டு. இதைவிட

கின்ற அழகுப் பொருளன்று. மனிதனின் வாழ்வியலோடு தொடர்புடையதுதான் ஓவியம். அவ்வாறு தொடர்பு கொண்டிருந்தால் தான் ஓவியம் வளர்ச்சியடையும். காலவெள்ளத்தையும் எதிர்த்துச் சென்று முன்னேறிக் கொண்டிருக்கும், மக்கள் வாழ்க்கையின் பிரதிபலிப்புத்தானே ஓவியம்.

நம் நாட்டில் இப்பொழுது கவின் கலை வளர்ச்சியில் ஒருபுதிய விழிப்புணர்ச்சி தோன்றியுள்ளது. காட்டிலுள்ள அனைவரும்

For Prompt and
Reliable Repairs
of
*Wrist Watches*
*Alarm Clocks*
&
*Wall Clocks*

# A. K. Mohamed & Co.

**14, Kasturiyar Road,**

**JAFFNA.**

**முஹிதீன் ஜுவெல்லர்ஸ்**

அழகிய
நவீன உத்தரவாதமுள்ள
**தங்க நகைகளுக்கு**
*111, கஸ்தூரியார் வீதி,*
யாழ்ப்பாணம்.

★

# Mohideen Jewellers

Guaranteed
JEWELS IN LATEST DESIGNS
**111, Kasturiyar Road,**
**JAFFNA.**

★ அழைப்பிதழா?
★ வாழ்த்திதழா?
★ புத்தகமா?
★ சஞ்சிகையா?

எதுவேண்டுமானாலும்
குறித்த தவணைக்குமுன் அச்சிட்டளிக்கவும்
உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான
படிவங்கள் காகிதாதி உபகரணங்கள் வழங்கவும்
சிறந்த ஸ்தாபனம்

# தங்கராஜா அச்சகம்

**39/3, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஓவியத்தின் பெருமைகளையும், கருத்துக் களையும் புரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுடையவர்களாக இருக்கின்றார்கள். இப்பொழுது சில ஓவியக் கருத்தரங்குகளில் பேசுகின்ற விடயங்களைக் கேட்டுத் தங்கள் ஆவலை ஓரளவு பூர்த்தி செய்து வருகின்றார்கள். நாட்டு மக்களின் ஓவிய உணர்வை மேலும் அதிகப் படுத்துவதற்கு இதுபோன்ற ஓவியக் கருத்தரங்குகளை விரிவு படுத்தி வருகின்றார்கள் கல்விப் பகுதியார். இவ் ஓவியக் கலை ஓர் அற்புத சக்தி வாய்ந்தது. சுடர் விடும் கதிரவனையும், குளிர் வெண்நிலாவையும் பலநிறங்களுடைய மேகக் கூட்டங்களையும் நம்மோடு விளையாட மண்ணகத்திற்கு வரவழைக்கும் ஒரு மந்திரவாதி, வானத்தையும் நிலத்தையும் ஒன்றாக இணைக்கின்ற ஒளி, இறந்த காலத்துக்கும் எதிர் காலத்துக்கும் இடையேயுள்ள ஒரு பாலம், பலமைல்களுக்கப்பால் உள்ள வேறுபட்ட மனிதர்களை இணைக்கக்கூடிய அன்பு நண்பன் காலம் காட்டும் கருவி மனக்கவலையைப் போக்கும் மாமருந்து, வரண்டுபோன மனித உள்ளத்தை வளமாக்கும் வானத்து நீர்துளி அருள்பொலிகின்ற அமுத நிலா, இயற்கை அழகிலே ஆண்டவனின் தத்துவத்தை உணர்த்துகின்ற ஒரு தத்துவஞானி, இவைகளைக் காட்டிலும் உள்ளத்தையும் அறிவையும் ஒழுக்கமென்னும் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கின்ற அன்புத்தாய் என்று கூறலாம்.

இன்னும் பிற சிறப்புக்களைவிட ஓவியம் மனிதனின் தோன்றாத் துணையாய் நின்று ஒளிவிடக் கூடிய ஒரு வழிகாட்டியாகும். ஓவியம் எந்தக் காலத்தில் வளர்ச்சி பெற வில்லையோ அந்த காலத்திலே வாழுகின்ற மனிதர்களின் சிந்தனையும் அறிவும் நின்ற இடத்திலேயே நின்றுவிட்டது. என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் ஓவியங்கள் பார்க்கும் தோறும் பார்த்துச் சிந்திக்கின்ற பொழுதும் ஓவியத்தின் வளர்ச்சி, மக்களின் சிந்தனைக் கூர்மை, அவர்களது வாழ்க்கைமுறை இவைகளெல்லாம் நம்மைப் பெரும் வியப்பிலே ஆழ்த்துகின்றன. அவர்கள் மட்டும் ஓவியக் கலையில் சீரும் சிறப்புமுற்ற வாழ்க்கையை எவ்வாறு எட்டிப்பிடித்தார்கள்? ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.

ஆண்மையும் அருளும் கலந்தவைதாம் நம் ஓவியங்கள் ஆண்மையில்லா அருள், அருளில்லா ஆண்மை இவைகளால் பயனில்லை. ஆகவே தான் ஓவியங்கள் இரண்டையும் உணர்த்துகின்றன. அப்படி உணர்த்துவதால் ஓவியங்கள் சில சாகாவரம் பெற்று அன்றுபோல் இன்றும் வாழ்கின்றன. ஓவியங்களில் நாம் காண்பதெல்லாம் காதல், அன்பு, இரக்கம், மனிதன் மனிதனாக நடந்து கொண்ட நிகழ்ச்சிகள் ஒருவன் ஒருத்தியிடம் இணைந்து உயர்ந்து வாழ்ந்த தத்துவம் இவைகள் தாமே. ஆகவே தான் ஓவியங்கள் எல்லோர்க்கும் இனிப்பாக விளங்கிக் கால வெள்ளத்தையும் எதிர்த்து நம் கண்முன் தோன்றி நம்மைக் களிப்படையச் செய்கின்றன.

ஓவியங்கள் ஆறறிவு படைத்த மனிதனின் நிகழ்ச்சியை மட்டும் எடுத்துக் காட்டவில்லை. இறைவனால் படைக்கப்பட்ட அனைத்தையும் அழகுபடுத்திச் சித்தரித்துள்ளனர் ஓவியர்கள். ஆண்டவனின் அழகைச் சித்தரிக்க வல்ல ஓவியனின் பிறவியைத் தெய்வப் பிறவி என்று சொல்வதைத்தவிர வேறு என்ன சொல்லமுடியும்? அரசனின் சிறப்பு வீரம், ஈரம், காதல், வளம், கொடை, அன்பு, அறம், போர்முறை, பொருள் தேடும்முறை, எனும் எத்துறை பற்றியதாயினும் கலைஞன் தீட்டும் ஓவியம் காண்போர் உள்ளத்தைத் தொடுவதாகவே காண்கின்றோம். அப்படிப்பட்ட ஓவியங்களின் வழி நின்று வாழ்வியலில் வெற்றி பெறுவோமாக. ஓவியங்களைப் பார்க்கும் பொழுது சிந்தனைக்கு இடம் கொடுக்க வேண்டும். சிந்திக்கும் ஆற்றல் உள்ளவன் தான் மனிதன், சிந்தித்த காரணத்தால் தான் சித்தார்த்தன் புத்தன் ஆனான். அசோகன் போரை வெறுத்து அமைதியை விரும்பினான். சிந்தனை செய்யும் பொழுது நம் ஆத்மா மகாத்மாவாக மறலாம் சிந்திப்போம். சிறந்தவராக வாழ்வோம்.

தென்னகத் தாரகையின் 6வது ஆண்டுவிழா
இனிதே நிறைவுபெற
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

அழகிய போட்டோக்களுக்கு

**குகன் ஸ்ருடியோ**

கண்டி வீதி. சாவகச்சேரி.

தற்கால
* பெண்கள்
* ஆண்கள்
* பிள்ளைகள்

உடுப்புகள் தயாரிப்பதில்
பிரபல தையல் ஸ்தாபனம்.

**A. V. M.'s**
**TAILORING**
**Kandy Road, Chavakachcheri.**

வாழ்த்துக்கள்!

**கண்ணு**
**வாச் வேக்ஸ்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

உரிமையாளர்: K. A. பாலசுந்தரம்

# பாமரனும் பண்டிதரும்

இக்கதை நானாகக் கற்பனை பண்ணியதல்ல. என்றோ ஒருநாள், எங்கோ, யாரோ தந்த உள்ளடக்கம். அதற்கு இன்றைய நிலைக்கேற்ப உருவம் கொடுத்திருக்கிறேன்· படியுங்கள், இன்றைய சமூக அமைப்பின் அன்றாடச் சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்·

- கே. டானியல் -

ஒரு கிராமத்தில் மெத்தப் படித்த பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் படிக்காத நூல்களில்லை. அவர் ஏறாத இலக்கிய மேடைகள் இல்லை.

பண்டிதர் ஒருநாள் தன் கிராமத்தை விட்டு வேறூர் கிராமம் செல்லவேண்டியதாயிற்று. தனது கிராமத்தைக் கடந்து செல்வதற்கு ஒரு நீரோடையைத் தாண்டியாக வேண்டும்.

பண்டிதர் நீரோடைக்கரைக்கு வந்தார். அங்கே ஒரு தோணி இருந்தது. அந்தத் தோணியைச் செலுத்துபவன் பண்டிதரைக் கண்டதும் அன்றைய வயிற்றுப் பசிக்கு உழைப்புக் கிடைத்து விட்டதென மகிழ்ந்து பண்டிதருடன் பேரம் பேசி, பண்டிதரை ஏற்றிக் கொண்டு அக்கரையை நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

தோணி நகர்ந்து கொண்டிருந்தது.

பண்டிதர் மெத்தப் படித்தவரல்லவா!

அதனால் அவருக்கு பேசவேண்டும் போல இருந்தது. ‘‘ தோணிக்காரா; தோணிக்காரா நீ கம்பராமாயணம் படித்திருக்கிறாயா?’’ என்று தோணிக்காரனைப் பார்த்துக் கேட்டார்.

தோணியைத் தாங்கிச் செல்வதிலேயே கவனத்தைச் செலுத்தியிருந்த தோணிக்காரன் பண்டிதரின் குரல் கேட்டுக் கவனத்தைப் பண்டிதர் பக்கம் திருப்பி ‘‘ இல்லை ஐயா, நான் ராமாயணம் படிக்கேல்லை ஐயா!’’ என்று மொட்டையாகப் பதில் சொன்னான்.

‘‘ ஐயோ நீ என்ன மனிதனப்பா? ராமாயணம் படிக்காத வாயும் ஒருவாயோ? நீராமாயனணத்தைப் படிக்காததினால்வாழ்க்கையின் கால்பாகத்தயே இழந்து விட்டாய்!’’ என்று தோணிக்காரன் மேல் இரக்கப்பட்டார்.

சற்று வேளை பேச்சுக்களே இல்லை.

தோணி நகர்ந்து கொண்டிருந்தது.

‘‘தோணிக்காரா; தோணிக்காரா நீ மணிமேகலை படித்ததுண்டா?’’ என்று பண்டிதர் மறுபடியும் கேட்டார்.

‘‘ அப்படி ஒரு பொம்புளைப் புத்தகம் இருக்கெண்டே எனக்குத் தெரியாதையா?’’ என்று தோணிக்காரன் படக்கென்று பதில் சொல்லிவிட்டான்.

யாழ்நகர் வரும் சோர்வுற்ற பயணிகள்
சௌகரியமாக இளைப்பாறுவதற்கு உணவுடன் கூடிய
தங்கும் அறைகளுக்கு விஜயம் செய்யுங்கள்.

# குமாரன் டூறிஸ்ட் இன்
# KUMARAN TOURIST INN

நகரின் மத்தியில் குறைந்த செலவில் நிறைந்த வசதிகளைக்
கொண்ட 30 தங்கும் அறைகளைக்கொண்டது.

தாமதமற்ற இனிய சேவை!

[லிடோ தியேட்டருக்கு அருகாமையில்]

67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*With Best Compliments*

*from*

# RATHY WATCH WORKS & STORES

REGISTERED CEYLONESE IMPORTERS
Sub - Agents for Raleigh Cycles
Dealers in Cycle Spares, watches Etc.

**Specialists in Watch Repairing**

44, 46, Kasturiar Road, JAFFNA.
Cable: RATHY Phone: 7103

''ஐயோ நீ பெரிய பாவி, மணிமேகலை படிக்காததினால் நீ உன் வாழ்க்கையின் அரைப்பாகத்தையுமே இழந்து விட்டாய்!'' என்று பண்டிதர் மீண்டும் ஒருமுறை தனது கவலையைத் தெரிவித்துக் கொண்டார்.

தோணி சற்று வேகமாக மேலும் நகர்ந்து கொண்டிருந்தது.

சற்று வேளைக்குப் பின் பண்டிதரே மறுபடியும் பேசினார்.

''தோணிக்காரா; தோணிக்காரா நீ சிலப்பதிகாரம் படித்திருக்கிறாயா? என்ற பண்டிதரின் கேள்விக்கு ''அதெப்படி ஐயா எங்களாலை முடியும்? நாம வயித்தை நிறைக்கிறத்துக்கே உழைக்க முடியுதில்லை!'' என்று அலுத்துக்கொண்டே பதில் கூறினான் தோணிக்காரன்.

''தோணிக்காரா சிலப்பதிகாரத்தைப் நீ படிக்கத் தவறியதால் வாழ்க்கையின் முக்கால் பாகத்தையுமே இழந்துபோய்விட்டாய்! ஐயோ பாவம் என்று'' பண்டிதர் மேலும் அவன் மீது அனுதாபப்பட்டார்.

இப்போது தோணி நடுப்பகுதிக்கு வந்துவிட்டது.

அடிவானத்தில் மின்னல் கோடிகாட்ட வானம் இடித்தது.

காற்றுப் பலமாக வீசத்தொடங்கியது.

நீர் அலைகள் மேலெழுந்து மேலெழுந்து தோணியை ஆட்டி ஆட்டி அலைத்தது.

மழையும்கொட்டத் தொடங்கிவிட்டது.

''பண்டிதரையா உங்களுக்கு நீச்சல் அடிக்கத் தெரியுமா?''

இப்பொழுது தோணிக்காரனே பண்டிதரைக் கேள்வி கேட்டு விட்டான்.

''நீச்சலடிப்பதைப்பற்றி புத்தகத்தில் படித்திருக்கிறேன் சுழி ஓடுதல், பிற நீச்சல் வலித்தல், உள் நீச்சல் அடித்தல், தனித் தனி கால்அடித்து நீந்துதல் ஆகிய நாலாவித நீச்சலைப்பற்றியும் படித்திருக்கிறேன்'' என்று பண்டிதர் சொல்லி முடிக்குமுன், '' அதைப் பத்தி நான் கேக்கேல்லை ஐயா நீங்க தண்ணீரிலை நீந்தி இருக்கிறீங்களா? என்று தோணிக்காரன் மீண்டும் கேட்டான்

''இல்லையே!'' என்று பண்டிதர் பதில் சொன்னார்.

''அப்படியெண்டால் நீங்கள் உங்க வாழ்க்கையின் முழுப்பாகத்தையுமே இழக்கப்போறீங்க'' என்று தோணிக்காரன் கூறி முடிக்குமுன் ஒரு சுழிக்காற்று தோணியைப் புரட்டி விட்டது.

''ஐயோ!'' என்ற பண்டிதரின் மரண ஓலம் மட்டும் கேட்டது.

பண்டிதர் நீரில் அமிழ்ந்திப் போனார்

ஓடக்காரன் நீந்திக் கரைக்கு வந்துவிட்டான். பின்பு பண்டிதரைத் தேடினான். பண்டிதர் கரைக்கு வரவேயில்லை.



செல்லத்துரைப் பத்தர்
தங்கராஜா

**சிவா ஜுவலர்**

கண்டி வீதி, சாவகச்சேரி.

உத்தரவாதமுள்ள அழகிய
**தங்கப்பவுண் நகைகள்**
கிடைக்குமிடம்.

ஓடர் நகைகள்
உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.

N. V. S. THANKARAJA

**SIVA JEWELLER**
**Chavakachcheri.**

---

**கதிர் எலட்ரிக் வெல்டிங்**

**அன்ட் ஓட்டோ வோர்க்ஸ்**

★

**கேட், கிறில், சுருக்கு கேட்**

இரும்பு வேலைகள் செய்து தரப்படும்

டச் ரோட், சாவகச்சேரி.

# கலை உலகில் நடனக் கோலம்



செல்வி நகுலமாலா நவரத்தினம்

தென்னகத்தாரகை நடன ஆசிரியை

லலித கலைகளுள் தலையானதான நடனம் சிறப்புமிக்க வரலாற்றுப் பின்னணி கொண்டது. பண்டைக்கால இலக்கியங்கள் மட்டுமின்றிப் பழம் பெரும் சிற்பச் சித்திர வேலைப்பாடுகளும் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து போற்றப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வந்த நடனக் கலையின் சிறப்புக்கும் தொன்மைக்கும் சான்று பகர்வன ஞானிகளும், தெய்வஅருள் பெற்ற பெரியாருமே புரிந்துகொள்ளக்கூடிய உயரிய தத்துவங்களை எல்லாம் முத்திரைகளின் மூலமும் நளினமான பாவங்களின் மூலமும் பாமர ம்க்களுக்குப் புரியவைக்கும் உயரிய சாதனம் போன்றது என்பது பலரும் அறிந்த உண்மை. மனித உள்ளங்களில் கலையார்வம் துளிவிட்ட நாள்முதல் நடனமும் ஒரு நிலைபெற்ற சாதனமாகப் பரிணமித்து நீடித்து வந்துள்ளது. வேதங்களும் உபநிஷதங்களும் நாட்டியத்தைப்பற்றிப் பல இடங்களில் பேசுகின்றன. அசுவமேத யாகம் முற்றுப்பெற்றதும் அக்கினி குண்டத்தைச் சுற்றிப் பெண்கள் பலர் சிரசிலே கலசமேந்தி நடனமாடும் மரபினை இருக்கு, யசுர் வேதங்களில் காணக் கூடியதாக இருக்கின்றது.

வேதகாலப் பிரதான கடவுளான உருத்திர சிவனை நாட்டியக் கோலத்தில் காட்டுகிறது ஒரு சுலோகம். எதிர்காலத்தில் இணையற்ற நடன நாயகனாக வடிவெடுக்கவிருக்கும் நடராசனது முன்னோடியே இந்த உருத்திர சிவன். இங்ஙனம் வேத காலத்தில் காண்கின்ற நாட்டியக் கலையின் தொடக்கம் நீண்டதொரு தொடர் கதை போல் நீடித்து வளர்ந்து காலப்போக்கில் பல பிராந்தியங்களில் பல வேறுபாடுகளை அடைந்து இன்று அனேக பிரிவுகளைக் கொண்டதாக விளங்கி வருகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த பரதர் இயற்றிய நாட்டிய சாஸ்திரம் நடனக்கலையின் அகராதியென மதிப்பிடத் தக்கது. அவர் காலத்தில் நடைமுறையில் இருந்து வந்த பல நடனவகைகளைச் சீர்படுத்தி தொகுத்த பெருமைக்குரியவர் பரதர். சிவபிரானது பல்வேறு நாட்டியக் கோலங்களை முதல் முறையாகத் தொகுத்துக் கொடுத்தவர் தண்டு என்பவரென்றும், அதனாலேயே சிவநடனம் தாண்டவம் எனப்படுவதாகவும் நவிலுகிறார் பரதர். நாட்டியக் கலையை ஒரு தெய்வீக வரப்பிரசாதமாகக் கருதிய பண்டைய இந்து சமூகத்தார் தாம் வணங்கும் கடவுளர்கள்

உங்கள் குழந்தைகள்

பரதக்கலையில் பாண்டித்தியம் பெற வேண்டுமா?

இன்றே நாடுங்கள்

# தென்னகத் தாரகை

# நடனாலயம்

டச்சு வீதி

சாவகச்சேரி.

அனைவரையுமே நடனமாடச் செய்து மகிழ்ந்தனர். தத்துவ விளக்கங்களுக்கு நிலைக்களனாக விளங்கும் நடனக் கோலத்தைத் தத்துவங்களாகவே விளங்கும் பரம் பொருளுக்கு அர்ப்பணித்து கலையையும் சமயத்தையும் இரண்டறக் கலந்து அக்கலையின் மூலமே அவ்விரண்டுக்கும் ஒருங்கே தொண்டு புரிந்தனர். ஆட்டிப் படைக்கும் ஆண்டவனையே ஆடவைத்த இப்புரட்சியை இந்து சமயத்தைத் தவிர வேறு எங்கு காணமுடியும்?

ஒவ்வொரு கடவுளையும் ஒவ்வொரு வகை நடனக் கோலத்தில் காட்டுகிறது பண்டைப் பெருங் காவியமான சிலப்பதிகாரம். சிவபெருமானின் கோடு கொட்டி, பாரதியின் பாண்டுரங்கம் விஷ்ணுவின் மல்லாடல், முருகனின் குடை, கண்ணனின் குடக்கூத்து, மன்மதனின் பேடி. துர்க்கையின் மரக்கால், லட்சுமியின் பாவை, இந்திராணியின் கடயம்... இப்படியாக நீளுகிறது பண்டைத் தமிழர் தம் கடவுளரின் நாட்டியவகைப் பட்டியல். இவையனைத்துள் மிகச் சிறப்புப் பெற்றதும், பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து கலை உலகில் கௌரவிக்கப்பட்டு வருவதும் சிவபிரானின் நடனத் திருக்கோலமே. ஸந்த்யா தாண்டவம், தாமஸ தாண்டவம், ஆனந்த தாண்டவம் என்பன அந்நடனக் கோலத்தின் முப்பெரும் பிரிவுகளாம். உலக மாதாவை பொன்னாசனத்தில் அமரச் செய்து அவள் முன் அந்திமயங்கும் நேரத்தில் சூல பாணி ஆடிய ஆட்டமே ஸந்த்யா தாண்டவம்.

சிவனார் நடம் புரியச் சரஸ்வதி வீணை மீட்டுகிறாள்; இந்திரன் குழல் ஊதுகிறான்; விஷ்ணு மத்தளம் அடிக்கிறான்; லட்சுமியோ இசை மாரி பொழிகிறாள், இந்நாட்டிய எழிலையும் ஒயிலையும் பருகி மகிழ, வானவெளியெங்கும் தேவர்களும், சித்தர்களும் நிரம்பி வழிகின்றனர். தாமஸ தாண்டவத்தைச் சிவனார் இடுகாட்டில் ஆடுகின்றார். பத்துக்கரங்களுடன் பிரேதசாம்பல் உடலெங்கும் துலங்கக் கோரபைரவி வடிவத்திலே சுழலும் இந்த ஈசன் நடேசனுக்கு அழகுமட்டுமின்றி உக்கிரமும் உண்டு என்பதைக் காட்டுமோர் உயரிய திருக்கோலம்.

மூன்றாவதான ஆனந்த தாண்டவமே மற்றவையைவிடக் கூடுதலான அளவுக்குக் கலையுலகில் பரவியதாகும். இந்த ஆனந்தத் தாண்டவம் இதர தாண்டவங்களைப் போலன்றிப் பஞ்சகிருத்தியங்கள் ஐந்தையும் பிரதி பலிப்பதாம். பிரம விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் ஐம்பெரும் கடவுளர்களால் புரியப்படுகின்ற சிருஷ்டி ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம் அனுக்கிரகம் என்னும் ஐந்து செயல்களை ஆனந்தத் தாண்டவம் படம் பிடித்துக் காட்டுவதாகத் தத்துவ ஞானிகள் விளக்குகின்றனர்.

நடனக் கலையின் கேந்திர ஸ்தானம் தமிழகம் என்றே கருதப்படுகின்றது. இத்தமிழகத்திலே நடனக் கலையுடன் சிற்பக்கலையும், ஓவியக்கலையும், ஒன்றிவளர்க்கப் பட்டிருப்பதைக் காணலாம். மகாவலிபுரத்தில் உள்ள ஒரு இந்திரன் இரண்டாம் தளத்தில் நடமாடும் ஈசனையும், அவனைக் கண்டு தானும் ஆடும் தண்டு என்னும் நாட்டிய சாஸ்திர விற்பன்னரையும் காணலாம். காஞ்சியிலுள்ள ஓர் ஆலயத்தில் சிவபெருமானின் தல சம்போதித நடனம் பலவும் எண்கரங்களுடன் சிறப்பாக ஆடும் ஊர்த்துவ தாண்டவம் ஒன்றும் குறிப்பிடத்தக்கன. கண்ணனது பால்ய நடனங்களைவிட யௌவனப் பருவத்தில் அவன் கோபியருடன் புரிந்த நடனங்களே தத்துவரீதியில் சிறப்பாக அமைகின்றன. எப்பொழுதும் கண்ணனையே நினைந்துருகி அவனுடன் கேலிக்கைகள் புரிந்து லீலைகளில் ஆழ்ந்து நடனம் புரிந்த கோபியர்கள் ஜீவாத்மாவின் அம்சங்கள் என்றும், அவைகள் நாட்டியத்தின் வாயிலாகப் பரமாத்மாவான கண்ணனுடன் ஐக்கியமடைந்தன என்றும் தத்துவ விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தென்னகத்தாரகை

இந்நகரத்தோங்க

வாழ்த்துகிறோம்!

ஆரோக்கியவாச வைத்தியசாலை

மட்டுவில் வடக்கு,

சாவகச்சேரி.

---

தென்னகத் தாரகை
சமூகவானில் என்றும் சுடர்விட்டொளிர
எமது நல்லாசிகள்!

U S H A

கண்டி வீதி, சாவகச்சேரி.

இப்படியாகப் பெருமை வாய்ந்த நாட்டியக் கலை பழம் காலத்தில் அரச சபைகளில் ஒரு முக்கிய கலையாகவே மதிக்கப் பட்டது. அந்தக் காலத்தில் நடனக் கலையைத் தெய்வீகக் கலையாவும், கவலையைத் தீர்க்கும் மருந்தாகவும் போற்றி வளர்த்து வந்தனர். முன்னுளில் ஆண்டவன் ஆலயங்களில் நாட்டியம் நாள் தோறும் நடைபெற்றதாக சமய நூல்களில் கூறப்படுகின்றது. நாட்டியத்தின் உருவாக இறைவனே எழுந்தருளி ஊர்த்துவதாண்டவம் ஆடியதாகப் புராணங்களிலே படித்திருக்கின்றேம். அப்படி இறைவன் சந்நிதிகளில் நடனமாடிய மாதர்களைத் ''தேவ அடியாள்'' என்று மதித்து வந்தனர். நடனமாடுபவர்களைத் தாதிகள், கணிகைகள் எனக் சேவலமாகக் கருதப்பட்டக் காலமும் உண்டு.

ஆனுல் அக்காலம் மாறி நாட்டியம் ஒரு அழகியற் கலையாகக் கருதப்படுவதுடன் பல நற்குடிப் பெண்களும் இன்று விரும்பிக் கற்று வருகின்றனர். மேல் நாட்டவர்கூட இக்கலையை விரும்பிக் கற்று வருகின்றனர் என்பது பெருமைக்குரிய விஷயம். நாட்டியத்தை சுலபமாகக் கற்று விடலாம் என்று நினைப்பது தவறும், முடியாத காரியமுமாகும். உடலின் ஒவ்வொரு அங்கத்திலும் அசைவை ஏற்படுத்த வேண்டும். இதற்கு இடைவிடாது நீண்டநாள் பயிற்சி வேண்டும். நடனக் கலை வாழ்க்கையோடு ஒன்றியது எனவே அதி ஒளிமயமானது. அது ஆன்மீகத் தத்துவங்களிலே ஊறியது. எனவே அது தத்துவமாகவே விளங்குகிறது. அது பரம் பொருளோடு பேசுகின்ற ஒரு பரிபாஷை. அது அவன் சந்நிதானத்திலே வளர்ந்தது. அவன் அருள் பெற்றது. இதை உணர்ந்து கடைப்பிடித்து வரும் கடைசி நடனக் கலைஞர்கள் இருக்குமவரை அதன் பெருமைக்கோ, புகழுக்கோ, தெய்வீகத்துக்கோ குறைவில்லை என்பது திடமான நம்பிக்கை.

தென்மராட்சிப் பகுதியில் கலையுணர்ச்சியை ஏற்படுத்தும் பூரண தனித்துவ நோக்கோடு உருவாகிய தென்னகத்தாரகை முத்தமிழ் வளர்ச்சிக்கும் முறையாகத் தொடர்ந்து பணிபுரிந்தது - புரிகின்றது புரியும் என்ற பூரண நம்பிக்கையோடு கலைகளுக்கே தாயாகிய கலைமகளை வேண்டிக் கொள்கின்றேன்.

நம்முடைய முயற்சியின் ஆரம்பத்தில் நம்மைப் பிறர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பலர் துணை செய்யமாட்டார்கள். ஆனுல் நம்பிக்கையை கைவிடாமலிருந்தால் காலக்கிரமத்தில் வெளியுதவிகள் தாமே வரும். ஆரம்பத்தில் நமக்கு நாமே துணை.

—பாரதியார்—

# Saroja Gold Mart



அழகிய தங்க வைர நகைகளுக்கு

உத்தரவாதமுள்ள இடம்

## சரோஜா தங்க மாளிகை

பவுண் பொன் வெள்ளி வாங்குபவரும் விற்பனையாளரும்

கண்டி வீதி, சாவகச்சேரி.

# GNANAMS

- PHOTOGRAPHERS (Air Conditioned)
- BLOCK MAKERS
- PHOTO STAT PRINTERS

301, Clock Tower Road, 81, Stanley Road,

JAFFNA.

Dial 7067

# தயைச் சொல்லில் மாறிடுமோ?

கூத்தாடி

காலையிளம் வேளையிலே — கன்னியவள்
கட்டழகுத் தாரகையாய்
வேலையகம் சென்றிடற்கு — அவள்
விருப்பமுடனே விரைந்தாள்

முல்லைமலர் மொட்டவிழ — முதுகினில்
மோதிடும் கார்குழலாள்
மெல்லமெல்லவே நடந்து — நல்ல
மெல்லியலாள் பஸ்சடைந்தாள்

இருக்கைதனைத் தேடிநின்றாள் — இடமின்றி
இரும்புக்கம்பி தான்பிடித்தாள்
உருக்கமுடன் பார்த்திருந்த --- பெரியவர்
உவப்புடனே தானெழுந்தார்

"பிள்ளை நீ அதிலையிரு" — என்றவர்
பெருமையுடனே மொழிய
உள்ள உவகையுடன் — அவளும்
உட்கார்ந்தாள் யன்னலுடன்

இருக்கைதனைப் பெற்றுவிட்ட — அவளும்
இயற்கையுடன் ஒன்றிவிட்டாள்
பருத்தவிழிப் பார்வையெலாம் — வெளியில்
பவனிசெலவே விடுத்தாள்

ஆசனத்தில் அமர்ந்துவிட்ட — அந்த
ஆரணங்கின் கோலமுகம்
தேசுடனே தான்பொலிய — திருமலர்த்
தெய்வமும் பொறுக்கலையோ?

# குயின் டெக்ஸ்

HOUSE

FOR

## QUALITY TEXTILES

## MADE GARMENTS

&

## FANCY GOODS

# QUEEN TEX

23, MOSQUE BUILDING, CHAVAKACHCHERI.

முன்னிருந்து வந்தசெந்நீர் — அவள்முக
முழுமதியைத் தேடிச்சென்று
பின்னிருந்த நங்கையுடல் — முழுவதும்
பின்னிப் படர்ந்ததுகாண்

துள்ளிக் குதித்தமங்கை — துயருடன்
துவண்டுவிட்ட கொடியதுபோல்
மெள்ளமெள்ளக் கைமலரால் — தனது
மேனிமுகம் பற்றினளே

உண்மையைக் கண்டறிந்தாள் — அவளது
உள்ளமும் குன்றிடவே
தண்ணொளி பரப்பிநின்ற — அவளுடல்
தளர்ந்து சரிந்ததுவே

சுண்ணும்பு பாக்குடனே — நல்ல
சுவைபெறவே வெற்றிலையும்
எண்ணியிட்டு எச்சிலுடன் — அவனும்
ஏற்று அனுப்பினனே

பொளிச்சென்று துப்பிவிட்டான் — அந்த
பொல்லா மனிதனவன்
துளிகூடத் தப்பாமல் — அவளின்
தூயவுடல் பற்றிடவே

வாய்திறந்து ''சொறி''யென்று — அவனும்
வடிவாகச் சொல்லிவிட்டான்
தாயுள்ளம் பெற்றதுன்பம் — அவனின்
தயைச்சொல்லில் மாறிடுமோ?

தென்னகத் தாரகையின் 6 வது ஆண்டு விழா மலர்
சிறப்புடன் திகழ வாழ்த்துகிறோம்

# முருகன் எலக்ட்றிக்கல் ஸ்ரோர்ஸ்

( மின்சார ஒப்பந்தக்காரரும் விற்பனையாளரும் )

6/8, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7110 தந்தி "கறண்ட்"

Space Donated
By

**Silva Watch Works**

10, NEW CENTRAL MARKET
Hospital Road,
JAFFNA.

ஆண்டுவிழா கொண்டாடும்
தென்னகத் தாரகைக்கு
எமது மனமுவந்த
வாழ்த்துக்கள்

**STYLO**

**"ஸ்டைலோ"**

15 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# தேக ஆரோக்கியமும் தென்னகத்தாரகையும்.

செ. செல்வபாஸ்கரன்
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்,
சாவகச்சேரி.

தேக ஆரோக்கியம் ஒரு செல்வமாகக் கருத்திற்கொண்டு சமூகத்தில் அக்கறை கொண்டவர்கள் சமூகத்திற்குப் பயனளிக்கு முகமாக விளையாட்டுக் கழகங்களை ஆரம்பித்து நடாத்தி வருவது ஓர் சமூகப்பணியாகும். இந்த மரபின் அடிப்படையில் தோன்றிய தென்னகத் தாரகை மலருக்கு ஒரு சிறு கட்டுரையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனித சமுதாயம் கூட்டு வாழ்க்கை நடாத்தத் தொடங்கிய காலம் தொடக்கம் விளையாட்டுக்களும் களியாட்டங்களும் தேக சுகத்தைப் பேணுவதன் நோக்கமாக நடாத்துவதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. சகலருக்கும் விளையாட்டு அவசியம் வேண்டும். அதிலும் இளம் பராயத்தினருக்கு அதி முக்கியமானது. இதன்மூலம் உடற்றசைகள் பலமும் உறுதியும் அடைகின்றன. உடலில் உறுப்புகள் பலம் பெறுகின்றன. சமிபாடு சீராக் நடக்கும். இரத்தோட்டம் நன்கு நடைபெறும். தேகத்திலிருக்கும் கழிவுகள் அகற்றப்படும். மன வலிமை உண்டாகும். நோய் இன்றி வாழலாம்.

நம் நாட்டுத் தேசிய விளையாட்டுக்களில் பாரம்பரியமான கிளித்தட்டு, ஓட்டம், நீச்சல் போட்டிகளில் நமது மூதாதையோரினால் பல ஆண்டு காலமாக நடாத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. நம்நாடு வெளிநாட்டு ஆதிக்கங்களின் கீழ் இருந்த தாக்கங்களின் பயனாக நம்நாட்டிலும் கிறிக்கெட், காற்பந்து, கொக்கி, வலைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் கைதேர்ந்தவர்களாக நம்மவர்கள் மாறிவிட்டனர். கூட்டாக விளையாட்டுக்களைத் தனி மனிதனால் திறம்பட நடாத்த முடியாமையாலும், சமூக மாற்றத்திற்கு அமையவும் பல விளையாட்டுக் கழகங்கள் நாடு பூராவிலும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

முன்பு விளையாட்டுக் கழகங்கள் ஒரு சில தனிப்பட்ட சொந்த நலனைக்கருதி குறுகிய எல்லைக்குள் இயங்கி வந்தன. இன்னும் அதே அடிப்படையில் அவை சில நகரங்களில் இன்னமும் இயங்கி வருவதைக் காணலாம்.

ஒருசிலருக்குச் சொந்தமான விளையாட்டுக் கழகங்களிலும் பார்க்க பொதுவான விளையாட்டுக் கழகங்கள் சமூகத்தின் நலனுக்காகக் கூடிய பணியைச் செய்வதை, சமூக நலனைக் கருத்திற் கொள்பவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

வறுமையின் தாக்கங்களும் தாழ்ந்த வாழ்க்கைத் தரமும், பொழுதுபோக்கும் விளையாட்டுக்களைக் கட்டுப்படுத்துகின்றன. இந்தக் கட்டுப்பாட்டை நிவிர்த்தி செய்யக் கூடிய நிலையில் தென்னகத் தாரகை சாவகச்சேரிப் பொதுமக்களுக்குத் தனது நேசக் கரத்தை நீட்டி இக்குறையை ஓரளவிற்கு

விழா காணும்

தென்னகத் தாரகைக்கு

எமது உளங்கனிந்த

'றிக்கோ' வாழ்த்துக்கள்!

# RICOH

★ சுவையான கோழிப் பிரியாணி

★ சுத்தமான சிற்றுண்டி வகைகள்

★ வகை வகையான உணவுகள்

★ ருசியான ஐஸ்கிறீம், புறூட்சலாட்

இன்னும் பல

# றிக்கோ ஹொட்டல்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(நவீன சந்தைக்கு முன்பாக)

போன் 464

நிவிர்த்திசெய்துகொண்டிருக்கிறது என்றே கூறலாம். பல்வேறு நாடுகளில் விளையாட்டுத்துறைக்கு அவர்களது அரசுகள் உதவியளித்து வருகின்றன. உலகநாடுகளில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியும் இதற்கு ஓர் முன்னேடியாக விளங்குகின்றது. நம் நாட்டிலும் விளையாட்டுத்துறை அமைச்சு என ஒரு அமைச்சு இன்று இயங்கி வருகின்றது.

விளையாட்டுத்துறை சாதி, சமய,பேதங்களுக்கு அப்பாற்பட்டது. இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்ருக தேக ஆரோக்கியத்தைப் பேணுதல் கணிக்கப்படுகின்றது. இதைக் குறிக்கோளாகக் கொண்டுதான் உடற்பயிற்சி, தேசிய கல்விமுறையில் பன்னெடுங்காலமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. உடலுறுதியை நிலைநாட்டவல்ல இவ்விளையாட்டுக்கள் கூட்டு முயற்சியினுல் சமூகத்தில் பரந்த மனப்பான்மையையும், ஒற்றுமையையும், சமூகத்தினதும் பிரதேசத்தினதும் நன்மதிப்பையும், நாட்டின் வலிமையையும் மேன்மேலும் வலுப்படுத்தத் தென்னகத் தாரகை ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் சந்தேகத்திற்கே இடமில்லை.

,‘ வாழ்க தென்னகத் தாரகை. வளர்க அதன் பணி !’’

* * * * *

புதுக்கவிதை

## கடலும் விளக்கும்

நல்லை- அமிழ்தன்

கடற்கரை இருளில்
கிடக்கிறேன்
தூரக் கலங்கரை விளக்கை
கண்கின்றேன்
அடித் தெழும்பும் அலைகளின்
கடற் குமுறல்
வழியொன்று புதிதாய்
எங்கள்
வாழ்வில் மலர்ந்திட
ஆர்த் தெழும்பி குமுறுகின் றது
கரை நிறைந்து வெண் நிலவால்
மின்னிடும் குறுமலர்கள்
ஆர்த் தெழும்பும் அலையின்
யுகக் குமுறலில் கரைந்து
கடலில் கரைகின் றன
கடற் கரை இருளில் கிடக்கின்றேன்
கலங்கரை விளக்கை காண்கின்றேன்

முயற்சி வெற்றி பெற

எமது நல்லாசிகள்

# சத்தியா ஏஜன்சீஸ்

வெளிநாட்டு, உள்நாட்டு, குடிவகை விற்பனையாளர்

உரிமையாளர்: எஸ். துரைராஜா

கண்டி வீதி, சாவகச்சேரி.

---

*With Best Compliments*

*From*

# Mahaluxmy Book Depot & Stores

Paints & School Stationary Goods Etc.

**Kandy Road, CHAVAKACHCHERI.**



# வீரமாமுனிவரின்
# தரமான தமிழ்த்தொண்டு

சைவமணி, வித்துவான்
மு. சபாரத்தினம் அவர்கள்

மக்கள் வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைந்து விளங்கும் பண்டைய இலக்கியங்கள் இன்று தமிழ்த் தாயை அணிசெய்யும் ஆபரணங்களாக விளங்குகின்றன. அத்தகைய இலக்கியப்பணியில் தமிழ்ப் புலவர்கள் மட்டுமல்ல, தமிழ்மொழியின் இனிமையில்-அதன் சுவையில் ஈடுபட்ட மேலைநாட்டறிஞர்கள் பலர் தமிழ்மொழியைத் தக்கவாறு கற்று, அதன் தொன்மையையும் பெருமையையும் உலகறியச் செய்வதில் முன்னின்று உழைத்தனர். தமிழகத்தின் இலக்கிய வரலாற்றை எண்ணிப் பார்க்கும்போது ஏறக்குறைய ஒருநூற்றாண்டுகாலம் மறக்க முடியாத மூன்று பாதிரிமார்களால் நிரப்பப்பட்டமை புலனாகும். தமிழ் இலக்கியத் தொண்டில் ஈடுபட்டதன் காரணமாகத் தத்துவ போதக சுவாமிகள், அருளானந்தர், வீரமாமுனிவர் ஆகியவர்கள் இன்றும் தமிழ் மக்களால் போற்றப்படுகின்றனர். அவர்களுள் வீரமாமுனிவர் தமிழ்மக்கள் என்றுமே மறக்கமுடியாத வகையில் பெருந்தொண்டாற்றியுள்ளார் என்றால் மிகையாகாது.

இத்தாலி நாட்டில் பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கொன்ஸ்தான்தைன் பெஸ்கி என்னும் பெயரோடுதோன்றி பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சமயத்தைப் பரப்பும் நோக்கோடு தமிழகத்திற்கு வந்தவரே வீரமாமுனிவர். 'வீரஞ்செறிந்த பெரும் முனிவர்' - என்ற பொருள் பொதிந்த பெயரையும் தமிழ்மக்கள் அவருக்குச் சூட்டியதில் வியப்பேதுமில்லை. அவர் எத்தகையதொரு சூழ்நிலையில் இத்தகைய தமிழ்ப் பணியைச் செய்தார் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். அவர் அந்நிய தேசத்தவராய் இருப்பினும். தமிழ்நாட்டுக்கு வந்த பிரதான நோக்கம் தம் சமயத்தைப் பரப்புதற்காகவேயாம். அதற்கு வீரமாமுனிவர் கையாண்ட ஓர் உபாயம் தாமும் தமிழைத் தக்கமுறையில் கற்க முற்பட்டார். எனவே அவர் செந்தமிழ் மொழியைச் செப்பமாகக் கற்றுத் தமிழ் மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களின் நட்புறவையும் நல்லெண்ணத்தையும் பெற்றுத் தமது சமயப் பணியை மேற்கொண்டார். ஆனால் சமயப்

தென்னகத் தாரகையின்

# 6 வது ஆண்டு விழா

சிறப்புடன் நிறைவு பெற எமது

## வாழ்த்துக்கள்

## தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

டச்சு, வீதி சாவகச்சேரி.

பணி, நளாந்தத்தில் தமிழ்ப்பணியாக மலரத் தொடங்கியது. தீந்தமிழின் இனிமையும், இலக்கண வரம்பும் வீரமாமுனிவரின் உள்ளத்தைப் பிணித்தன.

தமிழை நன்கு கற்றுத்தேறிய வீரமாமுனிவர், தமிழ்மொழிக்கு அணிசெய்யத் தலைசிறந்த நூல்கள் பலவற்றை எழுத முற்பட்டார்கள். அவர் எழுதிய நூல்களுள் முன்னணியில் திகழ்வது தேம்பாவணி என்னும் காவியமாகும். சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய தமிழ் நூல்களைத் தழுவித் தமிழ் மரபு பிறழாது தேம்பாவணியை இயற்றியமையை ஆராயுமிடத்து, தமிழ்மொழியில் அவருக்கிருந்த அளப்பரிய புலமையும் ஈடுபாடும் நன்கு புலனுகின்றது.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது"

என்னும் வள்ளுவன் தெள்ளுதமிழ்க் குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்த வீரமாமுனிவரின் ஈடிணையற்ற சேவையைத் தமிழ் கூறும் நல்லுலகத்தவர் என்றுமே மறக்க முடியாது. வீரமாமுனிவர் தமிழின் அருமை பெருமைகளை மேலைநாட்டவரும் கண்டு வியப்புறும் வண்ணம் ஒப்புயர்வற்று விளங்கிய திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தும் 'தொன்னூல் விளக்கம்' என்னும் தமிழிலக்கண நூலை எழுதியும் தமிழ்மொழியின் சிறப்பினைத் தக்கவாறு நிலைநாட்டினுர். அவைமட்டுமன்றித் தமிழில் வேதவிளக்கம், வேதியரொழுக்கம், வாமன்கதை, பரமார்த்த குரு கதை முதலான உரைநடை இலக்கியங்களையும் திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மானை போன்ற பிரபந்தங்களையும் சதுரகராதியினையும் இயற்றித் தமிழ்மொழியைச் சிறப்பித்தார். தமிழுரை நடையில் முதன்முதலாக எழுதப்பட்ட அங்கத இலக்கியம் பரமார்த்த குரு கதையென்றே துணிந்து கூறலாம்.

வீரமாமுனிவரிடம் விளங்கிய குறிப்பிடத்தக்க மற்றொரு மாண்பு அவர் தமிழ் நாட்டவரின் பண்போடு ஒன்றிப்பிணைந்து ஐம்பதாண்டுகள்வரை வாழ்ந்தமையாகும். வீரமாமுனிவர் சிறந்த கவிஞன் மட்டுமல்ல, உலகம் போற்றும் உரைநடையாளனுகவும், இலக்கண ஆசானுகவும் திகழ்ந்தார்: அவரால் எழுதப்பட்ட 'தொன்னூல் விளக்கம்' என்னும் இலக்கண நூல் நன்னூலையும் வெல்லத்தக்க வகையில் அமைந்து விளங்குவது கண்கூடு. பவணந்தி முனிவர் தம்து நன்னூலில் எழுத்து, சொல் என்ற இரு பகுதிகளை மட்டுமே எடுத்துக்கூற, வீரமாமுனிவர் தமிழ்மொழியின் ஐந்திறத்தையும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என வகுத்துக் கூறியமை குறிப்பிடத்தக்கது.

மேலைநாட்டிலிருந்து சமயத்தைப் பரப்பும் நோக்கோடு வந்த வீரமாமுனிவர், தமிழைக் கற்றுத் தமிழ் மக்களின் பாரம்பரியத்தில் ஈடுபாடு கொண்டு, தமிழ்மொழியில் தக்கபல நூல்களை ஆக்கித் தமிழன்னையின் தவப்புதல்வனுகவே மாறித் தமிழ் இலக்கிய வரலாற்றிலே என்றும் அழியாப் புகழைத் தேடிக்கொண்டார் என்ருல் மிகையாகாது.

இவ்வாறே தென்னகத் தாரகையும் சாதி மத வேறுபாடற்ற வகையில், ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' என்னும் இலட்சியப் பாதையில் ஆருண்டுகள் வரை தமிழுக்கும் சமூகத்திற்கும் அருந்தொண்டாற்றியதோடு ஒப்பற்ற ஒரு மலரை வெளியிடுவதும் விரும்பத்தக்கதே. சூழலில் உள்ள பாலர் பாடசாலையில், பலரறியாதவாறு படித்த குழந்தையான 'தென்னகத் தாரகை' தனது ஆருவதாண்டில், வீறுநடைபோட்டுப் பகிரங்கமாக அரசாங்கப் பாடசாலைக்குப் புறப்பட்டுவிட்டான், எதிர்காலத்தில் அவன் எதிர்நோக்கவேண்டிய பிரச்சனைகள் பல; பெற்ருேர் குழந்தையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுபோல, நிர்வாகத்தினரும் உறுப்பினர்களும் ஒற்றுமையுணர்வுடனும் ஒருமித்த குறிக்கோளுடனும் தென்னகத் தாரகையைத் தொடர்ந்து வளர்க்கவும். வளமான வாலிபனுக்கவும் முயற்சிக்க வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

# ஆனந்தஜோதி வைத்தியசாலை

கண்டி வீதி, சாவகச்சேரி.

குழந்தைகளின் கணை, மாந்தம், கிரந்தி, கரப்பான்
சம்பந்தமான ரோகங்கட்கும்
வயதுவந்தவர்களின் பாரிசவாதம், எக்ஸிமா, மேகக்கிரந்தி, மூலம்
மற்றும் சர்வரோகங்கட்கும்

**அனுபவம் வாய்ந்த சிகிச்சை ஆற்றப் பெறும்**

மேலும் நீடித்த ரோகங்களுக்கு கலந்தாலோசிக்கவும்.

ஆயுர், டாக்டர் **வ. சின்னப்பு**
**L. A. M. P.**(Cey) **M. I. H.** (India)

# SRI ICE HOUSE

ருசி மிக்க ஐஸ்பழம்

தரமான ஐஸ்சொக்

சுவையான ஐஸ்கிறீம்

கல்யாண வைபவங்களிலும் ஏனைய விழாக்களிலும்
உவப்புடன் பரிமாற வேண்டிய சுவைமிக்க குளிர்பான வகைகளை

**எம்மிடம் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்**

## ஸ்ரீ ஐஸ் ஹவுஸ்

டச்சு வீதி, சாவகச்சேரி.

# கண்சிமிட்டும் தாரகையே !

—கவிஞர் வே. ஐயாத்துரை—

வெண்பா

கண்சிமிட்டும் தாரகையே கன்னித் தமிழிதமே
வண்மைசொட்ட வாமுகநேர் வையகத்தில்–பண்ணருட்டும்
நாட்டியங்கள் நாடகங்கள் நல்லிசையும் நாம்திரட்டக்
கூட்டுறவே கொள்வாய் குணம்

கலைதிரட்டிக் கண்சிமிட்டும் கல்விநிறைக் காதல்
நிலையருட்டும் தாரகையே நேசன் – தலையருட்கண்
தென்னகத்தில் நாளும் திடமார் திலகமென
உன்னதமே வாழ்க உயர்ந்து

கட்டளைக் கலித்துறை

தென்னகத் தாரகை என்னும் திருப்பெயர் சேர்ந்திலங்க
முன்னுயர் நல்விளை யாட்டுக் கழகம் முருகமைந்த
தன்னகத் தார்பலம் தங்கும் சனசமூ கந்நிலையம்
பொன்னக மேயெனப் பொற்புற வாய்ந்தது பூரணமே!

கல்விப் பொருளறி கன்னித் தமிழ்வழி காத்திடவும்
செல்வப் பொருள்நிறை தென்னகத் தார்க்கிதம் சேர்ந்திட
சொல்லிப் புகழ்நெறி தூய திடமுயர் சூழ்ந்திடவும் [வும்
பல்கிப் பெருகுவாய் தென்னகத் தாரகை பார்தனிலே!

வாழிய தென்னகத் தாரகைப் பாலர்கள் வாக்குநிறை
வாழிய தென்னகத் தாரகை வாலிபர் வண்மைவழி
வாழிய தென்னகத் தாரகை மாதர்கள் வாழ்வுநெறி
வாழிய தென்னகத் தாரகை மாந்தர்கள் மாமதியே!

வணக்கம்

# கண்சிமிட்டும் தாரகையே !

கல்முனை — ராஜி சண்முகநாதன்

பால்சிந்தும் வெள்ளிநிலா வனப்பினூடே
பல கோடித் தாரகைகள் கண்சிமிட்டும்
நூல்கோடி இருந்தாலும் இலக்கியத்தில்
நாம்போற்றும் நன்னூலே ஒளியையூட்டும்
கோல்போடும் விளையாட்டுக் கழகந்தன்னில்
கால்பந்தும் யாழிசையும் ஓசையூட்டி
சால்புடைய சேவைசெய்யும் "தென்னக
தாரகை"யே பணி தொடர்க!


நல்ல பலதிட்டங்கள், நல்லநோக்கு
நம்மக்கள் முன்னேறவல்ல சேவை
இல்லையொரு எழில்மன்றம் என்றிராமல்
இக்கணமே தாரகைக்கு ஆக்கம்சேர்ப்பீர்
தொல்லைகளை விட்டொழித்து தூயதமிழ்வளர
தொடர்ந்திடுவீர் ஆண்டுபல வெற்றிவிழாக்காண
ஆறினிலே அற்புதமாய் அடிஎடுத்துவைக்கும்
அரியதொரு தாரகையே ஆல்போல்தழைத்திடுக!

## கண்சிமிட்டும் தாரகையே!

கவிஞர் — முருகு கந்தராசா

வானுயர்ந்து ஒளி சுரந்து வையமெலாம் தான்பரந்தே
காணுகின்ற தாயகத்தின் கண் சிமிட்டும் தாரகையே!
நின் வளர்ச்சி முழுதாகி உன்கொடிக்கீழ் தளமமைத்து
"என் கடமை முடிக்க"வென எழுவதும் நீ என்னாளோ!
பொங்கும் இன்னல் கரைந்தோட பொழியும் புதுதாரகை
எங்கும் இன்ப ஒளிவீச எழுவதும் நீ எந்நாளோ! [யாம்
சிங்கத்தமிழ் "காப்போரும்" சிங்களரும் மற்றவரும்
சங்க மமாய் ஒருகொடிக்கீழ் சமனுதல் எந்நாளோ!

தாரகையே 'நூலகமே' தமிழ் வளர்க்கும் கலையகமே!-புதுப்
பேரிகையே! பெருநிதியே! பலமுண்ட வீரர்களில்
ஒன்றியமே! ஒற்றுமையின் முழுஉருவே! இன்று எமை
பற்றி எழும் பசிபஞ்சத் துயர்துடைக்க வழியொன்றே!
நேரியது, நெளிவுண்டு, சுழிவுடனே நீளமுண்டு,
பாரியதிவ் வழியென்னும் படைதிரட்டி உயிர் கொடுக்கின்
கூரியது ஆயுதங்கள் குறி தவறு தடை தகர்க்கும்
சீரியது வரும் வரைக்கும் சிரமேற்று பணி தொடர்வாய்!



# கண்சிமிட்டும் ★ தாரகையே!


கல்வயல் — குமாரசாமி

குஞ்சி அழகோடு கூடி விளையாட
நெஞ்சு நிறையுதடீ! நீ எடுத்த பிஞ்சடிகள்
அஞ்சாண்டைத் தாண்டி அசைந்து நடந்துவர
கொஞ்சு மொழிக்குள் குறும்பு நடனங்கள்
மிஞ்சி அறிவு மிளிருமோர் நாடகமும் —
அஞ்சுகமே - நீயமைத்துக் கொண்ட இவ் அற்புதங்கள்
தஞ்சமென உன்னை அடையத் தவஞ்செய்து
விஞ்சினையோ! இல்லை வேறேதும் மந்திரமோ?

சின்னப்பெண் ஆனாலுஞ் சிந்தும் எழிற்சிரிப்பில்
என்னை இழந்தே இதயங் குளிர்கின்றேன்
தென்மராட் சிப்பகுதி சீரடைய நற்கலையில்
இன்னும்நீ உன்னுடைய இன்ப வதனத்தை
அன்போ டருள்க அனைவர்க்கும் அக்களிப்பில்
பொன்னனையா கோடி புதிய உருவாகும்
என்னடி! நீ சொல்கின்றாய் என்மனக் கற்பனைக்குச்
சின்னவளே! கண்சிமிட்ட எங்கெடிநீ கற்றாயோ?

# கண்சிமிட்டும் தாரகையே!

★ வடவரணியூர் — சி. சபா ★



விண்ணகத்தின் வீதியிலோர்
விழிகாட்டும் தாரகையாய்
கண்ணெதிரில் ஒளிவீசும்
கண்சிமிட்டும் தாரகையாய்
எண்ணத்திலே எழிலுருவாய்
எங்கெங்கும் பிரகாசமாய்
தென்னகத் தாரகை
தெளிவாகத் தெரிகிறது
ஆயிரங்கண் பார்வையோடு
ஆயிரத்துத் தொளாயிரம்
எழிலுருவில் எழுபத்து
ரண்டுதனில் சாவகச்
சேரியிலோர் செந்தாரகை
தென்னகத் தாரகையாய்
ஆக்கப்பட்ட பின்னரதன்
ஊக்கமது கண்டிடுவோம்

விளையாட்டுப் போட்டிகளால்
வீரர்களை வெளிக்காட்டி
நாடக மன்றமதால்
நடிகர்களை உருவாக்கி
"கலா – நடன" ஆலயத்தால்
கலைஞர்களை உண்டாக்கி
சமூகத்தின் சீர்திருத்தம்
சனசமூக நிலையத்திஞல்
சுமுகமாய் ஏற்படுத்தி
சுபீட்சத்துக்கு வழிகாட்டி
அன்பரையும் நண்பரையும்
அழகுடனே உருவாக்கும்
தென்னகத் தாரகையும்
தெளிந்தபல நோக்கங்களும்
சிறப்புடனே விளங்கட்டும்
சிரித்துக்கண் சிமிட்டட்டும்

# கண்சிமிட்டும் தாரகையே!

செல்வி சிவா சின்னத்தம்பி
நகரசபை அலுவலகம், சாவகச்சேரி

இன்னல் களைக் கடந்து
ஈர்மூன் றாண்டு களாய்
தென்ன கத்து வானில்
தேர்ந்து பணி புரிந்தாய்
கன்னல் மொழி பேசிக்
கண் சிமிட்டும் தாரகையே!
புன்மை இரு ளகற்றிப்
பூரிப்பாய் எந் நாளும்.

உன்னடி வாழு மக்கள்
உனதணி மணிக ளாக
இன்புற வென்று மொன்ருய்
இணைவுடன் வாழ, நீதி
அன்புடன் அறமு மோங்க
ஆக்கிய இலட்சி யத்தை
சென்னியில் ஏற்று என்றும்
சிறப்புறச் சேவை செய்வாய்!

---

சிலரால்தான் அஞ்சாமல் செயலாற்றமுடியும், அஞ்சாமல் எண்ணமுடியும், அஞ்சாமல் பேசவும்முடியும். எண்ணுவதில் அஞ்சாமை இருந்தால்தான் முற்போக்குக் கருத்துக்களை வரவேற்கவும் முடியும், பலரால் அதுமுடியாது; சமயத்துறை, இலக்கியத்துறை, அரசியல்துறை, இப்படி எல்லாத்துறைகளிலும் அஞ்சாமல் எண்ண வல்லவர்கள்தான் உலகிற்கு ஏதாவது செய்துவிட்டுப் போகிருர்கள்.

—மு. வரதராஜன்—

யாழ் நகரின் மத்தியிலே!

சுவை மிகுந்த உணவு வகைகள்

சிறப்பான சிற்றுண்டி வகைகள்

ருசியான ஐஸ்கிறீம், புறூட்சலாட்

குளிர்பானங்கள்

சுத்தமாகப் பெற்றுக்கொள்ள

# நியூ பிளவ்ஸ்

நவினசந்தை, யாழ்நகர்.

அழகிய பவுண் தங்க
நகைகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

## எம். கே. எஸ்.

ஜூவல்லர்ஸ்

ஆர். ஜி. பில்டிங்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 7547

Space Donated
By

## Design Readymade STORES

B 27, Grand Bazaar
JAFFNA.

# நாடகக்கலை

அ. பொ. செல்லையா, B.Sc

உள்ளத்து உணர்ச்சிகளின் ஒழுங்கான உருவகமே கலை என்பதை ஈடுபாடுடைய எவருமே உணர்வார்கள். ஆழ்ந்து எடுக்கப் பட்ட கலைகள் அறுபத்துநான்கென உரைப் பார்கள். குன்றிலிருந்து உடைபட்டு கால்களால் மிதிக்கப்பட்டு கிடந்த கல் வணங்குதற்குரிய சிலையாக மாறுகிறது. அதுதான் சிற்பக்கலை! நஞ்சுடைய நாகத்தை மகுடியாலும் மதங்கொண்ட யானையை யாழாலும் மகிழ்விக்கலாம் என்கிறார்கள். அது இசைக் கலையின் திறமை! இப்படிக் கலைத் துறை சிறந்தும் மிகுந்தும் மனித வாழ்வின் வெற்றிக்காகப் பயன்படுகிறது.

வாழ்வின் பயனை நன்குணர்ந்து, நயம் பல பெற்று வாழ்வதற்கு வாழ்வளிக்கும் வாழ்வுக்கலை - உயர் விலங்காகிய மனித சமுதாயத்தின் உயிர்க்கலை நாடகக்கலை என்றால் மிகையாகாது. காரணம், நாடகக் கலை பொருளை மட்டுமல்ல மனவுணர்ச்சிகளையும் நேருக்குநேர் காட்டும் இலகு இலக்கியமாகும்.

முடியுடை மூவேந்தர்களின் மடிகளிலே தவழ்ந்து, ஒல்காப்பெருந் தொல்காப்பியரின் இலக்கணக் காப்பியத்திலே மிளிர்ந்து, வான் மறை வள்ளுவன் குறளிலே ஒளிர்ந்து, சீரிளமைத் திறன் குன்றாதிருக்கும் எமது இன்பத் தமிழ் இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட பெருமை யுடையது. இயல் இசை இரண்டும் கேள்வி இன்பத்தை மட்டும் பயக்க நாடகமோ கேள்வி இன்பத்தோடு காட்சி இன்பத்தையும் ஆட்சித் திறமையோடு மாட்சிமைப்படுத்துகின்றது. கல்லாத கானக வாசிகளுக்குங்கூட நல்லியல்புகளை நல்லறிவு புகட்டி நாலுந் தெரிந்த நிலைக்கு உலகியல்பை உள்ளது உள்ளவாறே காட்டிச் செல்லும் பெருமையும் சிறப்பும் உடையது நாடகக்கலை.

நாடகக்கலை எமது தமிழோடு இரண்டறக்கலந்த நிலையிலிருந்தாலும் நாடகக் கலையை எல்லா நாட்டினரும் போற்றி வளர்க்கின்ற தொன்றாகும். மழையின் நீர்மையாலல்லாமல் விதைக்கப்பட்ட விதைகளின் தன்மைகளுக்கேற்ப பயிர் முளைப்பது போல அந்தந்த நாட்டுப் பண்புக்கேற்ப அது வளர்ந்தது.

காண்போர் உள்ளத்தில் ஒருவகைக் கிளர்ச்சியையூட்டிக் கண்ணோட்டத்திற்கு இடமளிக்கும் துன்பியலாகவும் கிளுகிளுப்பின் ஊடாக வந்து மகிழ்வை அளிக்கும் இன்பியலாகவும் நாடகக்கலை இரு பெரும் பிரிவுகளைக் கொண்டதாகும். மேலை நாட்டிலோ அல்லது சிங்களப் பகுதிகளிலோ சிந்தனையைக் கிளறிவிடும் வகையிலில்லாத வெறும் பொழுதுபோக்காக அமைந்திடும் - ஏன் நமது வட்டாரங்களிலுங்கூட சிரிப்புக்காக மட்டும் எழுந்திடும் நகைச்சுவை நாடகங்கள் இன்பியற் பகுதியைச் சேர்ந்தவையாகும்.

இந் நாடகக்கலை பண்டைத் தண்டமிழகத்தில் பெருஞ்சிறப்புற்றிருந்ததோடு அக்கால மக்களின் பேராதரவு பெற்றிருந்த

யாழ்நகரில் உங்களுக்குத் தேவையான
மாக்சிச, லெனினிச, மாஓசேதுங்
சிந்தனை நூல்கட்கும் மற்றும்
சீன அல்பேனிய
சஞ்சிகைகட்கும்

**வசந்தம் புத்தக நிலையம்**

15/1 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அழகிய
தங்கப்பவுண்
நகைகளுக்கும்
வைரங்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

**எஸ். எல். எம். தீபி
அன் சன்ஸ்**

"R. G. பில்டிங்"
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

சகலவிதமான ஆயுர்வேத மருந்துச்சரக்குகளும்
குறைந்த விலையில் மலிவாகப் பெற்றுக்கொள்ள
ஒரே ஸ்தாபனம்

# குமார முருகன்

**மெடிக்கல் ஸ்ரோர்ஸ்**

பஸ் நிலையம், சாவகச்சேரி.

உரிமையாளர்: S. கனகராசா

தென்பதை தமிழிலக்கண முதனூலாகிய தொல்காப்பியத்தாலும் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தாலும் தெளிவாக உணர முடிகின்றது. ஆனால் சமணம், பௌத்தம் முதலிய சமயங்களால் இழிவாக்கப்பட்டுச் சிதைந்த நிலையிலிருந்த நாடகக்கலை அண்ணாவி மரபு, மேதா விலாசம் போன்ற உருவங்களில் மீண்டும் வளரத்தொடங்கி பொருத்தமான பாடல்களுடன் வசனங்களும் விரவிக் கதைதழுவி இன்றைய மேடை நாடகமாக மாற்றமடைந்தன. ஆனாலும் முத்தமிழில் ஒன்று நாடகக்கலை என்பதைப் பக்தி வழி நிற்பவர்களில் பெரும்பகுதியினரும் தமிழ் சொல்லிப் பிழைக்கும் ஆசிரியர்கள் பலருக்கும் புரியவில்லை. காரணம், இன்றைய நாடகக் கலையை வளர்ப்பவர்களில் பெரும் பகுதியினர் சக்தியின் வழி நிற்பவர்களும் தமிழ் சொல்லிப் பிழைப்புச் செய்யாதவர்களுமாவார்கள். ஆதலால், அத்தகையவர்களைத் தகுந்தபடி இதில் ஈடுபடுத்துவதற்கான உத்திகளை நாடகக் கலைஞர்கள் கையாள வேண்டும். அப்பொழுது தான் இடைக்காலத்தில் ஏற்பட்ட வெறுப் புணர்ச்சி நாடகக்கலை பற்றிய தவறான எண்ணம் மக்கள் மனதிலேயிருந்து நீங்கும். இப்பொழுதும் நாடகந் தயாரிப்பதிலே, நாடகத்திற்கான நடிகைகளைத் தேடுவதிலே அரங்கேற்றுவதிலே எண்ணிறந்த துன்பங்களை, துயர்களை, இன்னல்கள் இடுக்கண்களை ஏற்கவேண்டியிருப்பதால் எப்படியோ ஒரு நாடகத்தை அரங்கேற்றியவர் மறு நாடகத்தைப்பற்றிக் கனவிற்கூட எண்ணாது மனந்தளர்ந்து தோல்வி மனப்பான்மையை அடைந்துவிடுகிறார். மேலும் பெண் பாத்திரத்திற்கு ஆண்களை நடிக்கவைத்து நாடகத்தின் உயிரோட்டத்தையே கொலை செய்துவிடுகிறார்கள். ஆனால், அத்தகைய தொரு சூழ்நிலையை மேலும் உருவாக்காது நல்லதொரு எதிர்காலத்தை நாடகக்கலைக்கு உருவாக்கிட நமது தமிழர் சமுதாயம் முன்வரவேண்டும். போக்கு வரத்துகளில், மருத்துவ மனைகளில் சகசங்காணும் பெண்கள் சமுதாயம் நாடக மேடையில் ஒதுக்கப்படுவதேன்?

நாடகக்கலையை வளர்க்கும் பிரிவுகளில் ஒன்றான சினிமாத்துறை இன்று நாடகத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் நிலையில் உள்ளது. ஆனாலும், தமிழ்ச் சினிமா நடிகர்களே ஒவ்வோர் நாடகக் குழுக்களை வைத்திருப்பதால் சினிமாவால் ஏற்பட்ட தடை உடைபடும் என நம்பலாம். நாடகக் கலை வளர்ந்திருக்கிறது; மேலும் வளர்கிறது தமிழ் நாடகக்கலை இன்னும் எவ்வளவோ வளர உள்ளது. நல்ல தமிழில், நல்ல சிந்தனையைக் கிளறும், வாழ்வுக்கு மகிழ்வூட்ட வழிகாட்டும் நாடகங்களை வசதிபடைத்தோரின் கண்பார்வையோடு மேடையேற்றுங் காலம் திசைதிரும்ப எல்லோரும் நயம் பெற நாடகக்கலையை வளர்ப்போமாக.

*

### புத்தகங்கள்

புத்தகங்கள் மனிதர்களல்ல; இருந்தும் அவை உயிரோடுள்ளன; அவை மனித ஞாபகார்த்தங்கள் அவனுடைய முன்னேற்ற விருப்பங்கள்; நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும், உள்ள தொடர்பு; அவன் உபயோகப்படுத்தும் ஆயுதங்கள்.

—ஸ்டீபன்லின் சென்ட்பெனட்—

எழில்மிகு கண்கவர் டிசைன்களில்
சேட்டுகளுக்கும்
றெடிமேட் உடைகளுக்கும்
ரஸாக் டெக்ஸ்டைல்ஸ்
மற்றும்
பிடவைகளுக்கும்
பிரசித்திபெற்ற ஸ்தாபனம்
**Razaag Textiles**
E. B. 7. Market Chavakachcheri.

6வது ஆண்டுவிழாவைக்
கொண்டாடும்
தென்னகத் தாரகைக்கு
எமது வாழ்த்துக்கள்

# அம்பிஹா
## ஜுவெல்ஸ்

நகை, இரத்தின வியாபாரம்
59, கன்னாதிட்டி.
யாழ்ப்பாணம்.

The Space Donated
By

# Fancy House

Leading Emporiun
for quality fancy goods
68. Grand Bazaar,
JAFFNA.

# தென்மர் குலவிளக்கு

கவிஞர் வி. கந்தவனம்

தென்மர் குலவிளக்கே தென்னகத்துத் தாரகையே
நன்மை அறுவடைக்கு நாற்றுநடும் ஊற்றொளியே
விளையாட்டில் வித்தெடுத்து மேவுகலை முத்தெடுத்து
வழிகாட்டி மக்களுக்கு வாழ்வுதரும் புத்தொளியே
சாதி மதபேத சரித்திரங்கள் மாண்டொழிய
வேது விளையாட்டு மின்கலையு மென்றுணர்ந்தே
ஆறுண்டு காலமதுள் அரும்பணிக ளாற்றிமிகப்
பேராண்டு நின்றொளிரும் பேரணியே வாழியவே.

முன்னர் ஒருகாலம் முறையுடனே ஆண்டிருந்த
தென்மர் வரலாறு சிறந்தவொரு தமிழ்வாழ்வு
மண்டிக் கிடக்குமிந்த வாழ்க்கை மகத்துவங்கள்
கிண்டி எடுத்திளைஞர் கிளர வுரைத்தெழுக
தென்மர் விளையாட்டுத் தென்மர் பழங்கலைகள்
தென்மர் தனித்துவங்கள் தேடி வளர்த்திடுக
தனித்துவங்கள் எங்கள் சொந்தச் சரித்திரங்கள்
திணைத்துணையென் றுலும் திரவியங்கள் காத்திடுக.

★ ★ ★

"மக்களிடையே பொதுப்பணி புரிபவர்கள் தன்னடக்கம் மிக்கவர்களாகவும் சரியான முறையில் சிந்திக்கத் தெரிந்தவர்களாகவும், அகந்தையும் மூர்க்கத்தனமும் தங்களை அண்டவிடாமல் தற்காத்துக் கொள்பவர்களாகவும் இருக்கவேண்டும். கூசாமல் சுயவிமர்சனம் செய்து கொள்ளவும், தவறு நிகழும்போதும் பணியில் குறைபாடு இடம் பெறும் போதும் துணிவுடன் திருத்திக் கொள்ளும் தன்மை உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

மாஓ சேதுங்

# விளையாட்டுச் செயலாளர்களின் பார்வையில்

## தென்னகத்தாரகை




எஸ். வி. பரமராஜா

இன்றைய உலகின் சமாதான தூதனாக விளையாட்டுக்கள் திகழ்கின்றன. முரணான இரு கொள்கைகள் கொண்ட இரு தேசங்கள் ஒரு பொதுவான நோக்கத்தின் கீழ் ஒன்றுபட பல மாறுபட்ட கருத்துக்களையுடைய நாடுகள் ஒரு பொதுவான மேடையில் ஒன்றுகூட விளையாட்டுக்கள் வழிவகுக்கின்றன இதற்கு உலக அரங்கில் அண்மைக் காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் சான்றுபகர்கின்றன.

எமது நகர வரலாற்றினை யான் உற்று நோக்கும்போது, பல கருத்துக்கள்கொண்ட வாலிபர்களை, ஒரு விசாலமான நோக்கத்தின்கீழ் ஒன்றுகூட்டி, முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதும் இவ்விளையாட்டுக்களே என்ற உண்மை தெட்டத்தெளிவாக விளங்குகிறது. பல பிரிவுகளாக இயங்கிய வாலிபர்களை நகரத்தின் இதயமான பகுதியில் ஒன்று சேர்த்து இயங்கவைத்தபெருமை எமது கழகமான தென்னகத்தாரகை விளையாட்டுக் கழகத்தையே சாரும்.

ஆறு ஆண்டுகளுக்குமுன் அதாவது 1972-ம் ஆண்டில் மென்பந்து விளையாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட எமது கழகம் இற்றைவரை பல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியுள்ளதோடு ஏனைய விளையாட்டுக் கழகங்களினாலும், ஸ்தாபனங்களினாலும் நடாத்தப்பெற்ற போட்டிகளிலும் கலந்து தனது திறமையை வெளிக்காட்டியும் உள்ளது. 1972-ம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடாத்தப்பெற்ற மெய்வல்லுனர் போட்டியில் முதன் முதலாக எமது கழகம் வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. 1973-ம் ஆண்டுமுதல் 1975-ம் ஆண்டுவரை உதவி அரசாங்க அதிபர்பிரிவு, உதைபந்தாட்டத்தைத் தவிர வேறுவிளையாட்டுக்களை நடத்தாமையால், இக்காலகட்டத்தில் எமது விளையாட்டுக்கழகம் மாத்திரமல்ல தென்மராட்சிப் பிரிவு விளையாட்டுத் துறையே ஒளியிழந்து கிடந்தது. இதன் பின் 1975-ம் ஆண்டு நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியிலும் எமது கழகமே சுற்றுக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.



எம். விவேகானந்தன்

எமது முயற்சி சோர்வடையாதிருப்பதற்கும், ஏனைய விளையாட்டுக் கழகங்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிப்பதற்கும் 1976-ம் ஆண்டு வடமாகாண தென்மராட்சி ரீதியில் ஓர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியையும் 1977-ல் வடமாகாண / தென்மராட்சி ரீதியில் மின்னொளியில் ஓர் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியையும் நடாத்தத் திட்டமிட்டு ஏனைய விளையாட்டுக் கழகங்களின் சினேகபூர்வமான ஒத்துழைப்போடு மிக வெற்றிகரமாக நடாத்திமுடித்தோம். நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வடமாகாண ரீதியில் யாழ். சடோஸ் விளையாட்டுக்கழகமும் தென்மராட்சி ரீதியில் எமது விளையாட்டுக் கழகமும், வடமாகாணரீதியில் 16வயதுக்குட்டோர்க்குரிய போட்டில் இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியும் வெற்றியீட்டின. மின்னொளியில் நடாத்தப்பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வடமாகாண ரீதியில் (ஓவர்கேம்) நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் தென்மராட்சி ரீதியில் (ஓவர்கேம்) எமது விளையாட்டுக் கழகமும், வடமாகாணரீதியில் (செற் அப்) ஆவரங்கால் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டின. முப்பிரிவிலும் சுமார் 80 கழகங்கள் பங்குகொண்டு எமது முயற்சிக்கு ஆதரவு தந்தமைக்கு எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1976-ம் ஆண்டு கைதடி குமரன் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பெற்ற மின்னொளியில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் எமது கழகமே முதலாவது இடத்தைப் பெற்றதுடன் ஓர் வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டது. இன்றைய நிலையில் எமதுகழகம் மென்பந்தாட்டம் (கிரிக்கற்), கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் பயிற்சி கிளித்தட்டு, தாச்சிபோன்ற விளையாட்டுக்களைத் தன்னகத்தே கொண்டியங்குகிறது.

குறுகிய காலத்தில் விளையாட்டுத்துறையில் துரிதமுன்னேற்றமடைந்துள்ள எமது கழகத்திற்குச் சொந்தமாக ஒரு மைதானம் இல்லைஎன்ற கசப்பான உண்மையை மிக வருத்தத்துடன் வெளியிடுகிறேன். சொந்த மைதானம் இல்லாத நிலையிலும்கூட யாம் ஒரு திருப்திகரமான அளவு முன்னேறியுள்ளோம். சொந்தமாக ஒரு மைதானம இருந்திருந்தால்???!!! இன்று சொந்தமாக ஒரு மைதானத்தைப் பெறுவதையே ஒரு பிரதான குறிக்கோளாக எமது கழகம் கொண்டுள்ளது. அந்த அவா நிறைவேறும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

எமது கழகம் தனது 6வது ஆண்டு விழாவைக் குதூகலமாகக் கொண்டாடும் இதே வேளையில் - ''எதிர்காலத்தில் தளரா முயற்சியுடன் முறையான பயிற்சியுடன் பல வீரர்களை உருவாக்கி, விளையாட்டுத் துறையில் பல சாதனைகளை நிலைநாட்டுவதன் மூலம், சமூகவானில் தென்னகத்தாரகையை நிரந்தரமாகக் கண்சிமிட்டச் செய்வோம் என்று யாம் ஒவ்வொருவரும் உறுதிபூணுவது'' - மிகப் பொருத்தமானதாகும். பல பெரியார்களின் வாழ்த்துக்களுடன் மிகவேகமாக வளர்ந்துவரும் எமது சழகம், நம்து சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய அதன்மூலம் எமது நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாதையமைக்கக்கூடிய; ஈற்றில் முழு உலகின் இன்றைய போக்குக்கு ஒத்துழைக்கக்கூடிய அமைப்பாகக் கட்டியெழுப்பப்படவேண்டும் என்ற பணிவான வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றோம்.



தென்னகத் தாரகையின் அங்கத்தவர்கள்

—1977—

# உடற் பயிற்சியும் அதன் சமுதாயப் பங்கும்

— எஸ். வேலாயுதம் —
உப தபால் அதிபர்
சாவகச்சேரி.

எழுத்தாளனுக்குப் பேனையும், இசைக் கலைஞனுக்கு இசைக்கருவியும், ஓவியனுக்கு மையும் எப்படியோ ஒரு மெய்வல்லுன னுக்கு "உடல்" என்பது பின்னிப் பிணைந் துள்ளது. சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம் என்ற முன்னையோர் கருத்து உடல் இருந்தால்தான் உள்ளம், உள்ளம் இருந்தால்தான் உலகம் என்ற உண்மை உடலுக்குக் கொடுக்கவேண்டிய மதிப்பை வலியுறுத்துகிறது. உடல்வலிமை உள்ளத் துக்கு வலிமையளிப்பதால், உள்ளத்தின் வலிமை எமக்கு சுறுசுறுப்பையளிக்கிறது. எமது சுறுசுறுப்பாக, துரிதமாக இயங்கும் தன்மை எத்தனையோ சமுதாய இலட்சியங் களை ஈடேற்றிவைக்கிறது. ஆகையினால் உடற்பயிற்சி எமது உடலை வருத்திக்கொள் ளும் ஒரு செயலாகவன்றி சமுதாயத்தில் எத்தனையோ தேவைகளையும் அபிலாஷை களையும் நிறைவேற்ற விளையும் சமுதாயத் தின் உந்துசக்தியாகவும் இருக்கின்றது.

"ஓடி விளையாடு பாப்பா" என்றான் ஒரு கவிஞன். இளைஞர் சமுதாயத்தைப் பார்த்து "இளைஞர்களே நீங்கள் இந்நாட் டின் வருங்கால வீரர்கள், பேராளிகள் நீங்கள் விளையாட்டுத்துறையிலும் அளப் பரிய சாதனைகள் சாதித்து சீனாவை உலகில் எல்லாத்துறைகளிலும் மண்ணையும், விண் ணையும் அதிரவைக்கும் சாதனைகள் புரிவதன் மூலம் உலகறியச் செய்வீர்" என அறை கூவல் விடுத்தார் மறைந்த மாமேதையும் சீனத் தலைவருமான மாவோ சேதுங். உலக மேதைகள், கவிஞர்கள், அறிஞர்கள், எழுத் தாளரெல்லாம் உடற்பயிற்சிக்கு உன்னத இடம் கொடுத்து வந்திருக்கிறார்கள்.

எமது ஈழவள நாட்டிலும் உலகத்தோ டொத்த விளையாட்டு நிகழ்ச்சிக்கு ஒரு வரலாறுண்டு. கிளித்தட்டு, சில்லெறிதல், வாறு பாய்தல் ஓட்டப்பந்தயம் போன்ற எமது பாரம்பரிய விளையாட்டுக்களுடன் நீச்சல், மிருகங்களுடன் மோதுதல் போன்ற விளையாட்டுப் பந்தயங்களும் எமது கலாச் சாரத்தோடொத்த விளையாட்டுகளாக இருந்து வந்திருக்கின்றன. மனித சமூகத் தின் அறிவியல் வளர்ச்சி ஒரு குறிப்பிடக் கூடிய கட்டத்துக்கு வளர்ச்சியடைந்து வந்தபோது குழுக்களாக வாழ்ந்த மனித ருள் உடல் வலிமை மிக்கவன் சமூகத்தை வழிநடத்தும் தலைவனாக இருக்கிறான். இது சில ஆயிரம் வருடங்களுக்கு முன் இருந்தி ருக்கிறது. மனித சமூகத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியில் அவன் சில சட்ட சம்பிரதாய பழக்க வழக்கங்களை அனுசரித்து வாழும் ஒரு சமூக அமைப்பு முறையை ஏற்படுத்தி கொண்டான். எழுத்தில் எதுவுமில்லாத போதும் உடல் வலிமையுள்ள தலைவனின் சொல்லுக்கு ஒரு சமூகம் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலைக்கு வளர்ச்சி யடைந்தது. உடல்வலிமையுள்ளவர்களின் ஒரு குழு மக்களை வழி நடத்தும் ஆளுனர் களாக மாறினர். மனிதனின் அறிவியல் வளர்ச்சி அரசன் என்ற ஒருவனை ஆளு னனாக் சிருஷ்டிக்குமளவிற்கு வளர்ந்தது. இதில் காணும் உண்மையென்னவெனில் உடல்வலிமைதான் யார் அரசன் என்ப தைத் தீர்மானிக்கும் நிலையில்தான் மனித வரலாறு வளர்ந்து வந்திருக்கிறது. இன்னும் சில உதாரணங்களை நாம் கூறுவதானால் மன்னனின் குமாரத்தியை மணம் முடிக்க போட்டி போட்ட இளவரசர்கள்

தென்னகத்தாரகை



உதைபந்தாட்டக்குழு - 1977

மன்னனால் ஏற்படுத்தப்பட்ட உடற்பலத்தைக் காண்பிக்கும் பந்தயத்தில் வெற்றி பெற்றுத்தான் இளவரசியை மணம் முடித்தார்கள். உடல் வலிமையை நிரூபிக்கும் போரிலே, அதாவது ஒரு மன்னனை இன்னொரு மன்னன் உடற்பலத்தை காட்டித் தோற்கடித்தே சிற்றரசர்கள் பேரரசர்களானார்கள். இதிலிருந்து நாம் காணக் கூடிய தென்னவென்றால் உள வளர்ச்சிக்கும் அறிவுவளர்ச்சிக்கும் முன் மனித வரலாற்றில் உடல் வலிமை முக்கிய இடத்தைப் பிடித்திருந்ததேயாகும்.

பந்தயங்களே பயிற்சியின் அவசியத்தை ஏற்படுத்தியது. மன்னர்கள் கேளிக்கை வைபவ காலங்களில் உடல் வலிமையை நிரூபிக்கும் உடற்கட்டுள்ளவனை தேர்ந்தெடுத்துப் பரிசில்கள் வழங்கி கௌரவித்தனர். இது மன்னர்களுக்குக் கேளிக்கையாகவும் மக்களுக்கு பொழுது போக்காகவும் அமைந்தன. மன்னர்களின் பரிசில்களைத் தட்டிக் கொள்ளவென சிறந்த உடல் வலுவுள்ளோர் பயிற்சிகளில் ஈடுபட்டனர். இது படிப்படியாக வளர்ச்சியடைந்தது. உடற்பயிற்சியும் கலையாக வளர்ந்தது.

வேட்டையாடி மிருகங்களைத் தின்று உடற் தேவைகளை பூர்த்தி செய்து வந்த மனிதனின் அறிவு வளர்ச்சியெய்த அவனுடைய தேவைகள் வளர்ந்தன. உணவோடு பிரச்சனையை தீர்த்தவனுக்கு மானம் காக்க உடைதேவைப்பட்டது. உணவும், உடையும், வீட்டையும் வசதிகளையும் வேண்டும் என்ற வளர்ச்சியை ஏற்படுத்தியது. அறிவியல் வளர்ச்சி விஞ்ஞான வளர்ச்சியில் கொண்டு வந்து விட்டது. தொழில் வளர்ச்சி மூளையின் அறிவியல் வளர்ச்சியை நிரூபித்தது. அவ்விதமாக அறிவியல் வளர்ச்சியைப் பெற்ற மனிதன் விஞ்ஞான சாதனைகளைப் புரியத்தொடங்கினான். உடலால் உழைத்துப் படைக்கப் பெற்ற மனிதனின்தேவைகள் யந்திரங்களால் படைக்கப்பட்டன. மனிதனின் மூளை யந்திரங்களைக் கண்டது. ஒரு சிறு மனிதன் பெரிய ஒரு பாரமான கல்லை தூக்கி எறிவதற்கு இயந்திரத்தைப் படைத்தான். இது அறிவுவளர்ச்சியினால் ஏற்பட்டது. அதனால் உடல் வலிமையை அறிவு வளர்ச்சி மிஞ்சி நின்றது. உடலை வளர்ச்சி செய்த தொழில்களையெல்லாம் இயந்திரங்கள் செய்யத் தொடங்கியதும், மனிதனுக்கு உடலுக்கு பயிற்சி குறைந்ததும், உடற்பயிற்சி ஒரு கலையாகத் தனித்து வளர்ந்தது. உடல் உழைப்பை மூளை உழைப்பு வென்ற போது மூளை உழைப்பாளிகள் எல்லாம் உடற்பயிற்சிக் கலையை நாடவேண்டியதாயிற்று. கடந்த நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகளில் உடற்பயிற்சிக்கலை ஒரு மிகப் பெரிய சமுதாய தேவையாக உருவெடுத்து வளர்ந்து வருகிறது.

அந்நியர் வருகை எமது நாட்டிலும் எமது பாரம்பரிய கலை கலாச்சாரங்கள் மத அனுட்டானங்கள், கல்வி இன்னோரன்ன துறைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அத்துடன் உடற்பயிற்சித் துறைகளிலும் மாற்றங்களைக் கண்டது. வெள்ளைக்கார அந்நியன் எமது ஈழவள நாட்டிற்கு வந்து ஆட்சியைக் கைப்பற்றியதும் மூளை உழைப்பை அதாவது உத்தியோகங்களை தாம் செய்துகொண்டு உடலுழைப்பை எம்மக்களிடம் விட்டனர். மூளை உழைப்பாளிகளான வெள்ளைக்கார உத்தியோகத்தர் மாலை நேரங்களில் உடற்பயிற்சி செய்வதற்கெனக் கழகங்களை (CLUB) அமைத்தனர். அவர்கள் தமது நாட்டு விளையாட்டுகளான கிரிக்கட், ரெனிஸ், ஹாக்கி கொல்ப்போன்ற விளையாட்டுக்களை மாலை நேரங்களில் விளையாடினர். இந்த விளையாட்டுக்களை எமது நாட்டின் ' ஆண்ட பரம்பரையினர்'' இன்னும் ஆளத் துடிக்கின்றவர்களான தமிழர் சிங்களவர் வெள்ளைக்காரனுக்கு வால்பிடித்து அவனுடைய கலாச்சாரம் பண்பாடுகளில் மோகம்கொண்ட எமது நாட்டுப் பணக்காரர்களாயிருந்த அன்றைய ஆண்ட பரம்பரையினருக்கு தமது கழகங்களில் இவ்விளையாட்டுக்களைக் கற்பித்துவிட்டனர். இந்தநிலையில் கிராமப்புறங்களில் வாழ்ந்த தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் தமது பாரம்பரிய

தென்னகத் தாரகையால் மின்னொளியில் நடாத்தப் பெற்ற கரபந்தாட்ட
(செற் அப்) போட்டியில் வெற்றிவாகை சூடிய




ஆவரங்கால் ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்கள்

விளையாட்டுக்களுடன் மேற்கத்திய விளையாட்டுக்களையும் கற்றனர். தாங்களும் வெள்ளைக்காரனைப் பார்த்து விளையாட்டுக் கழகங்களை நிறுவத்தொடங்கினர். இப்படியாக விளையாட்டுக் கழகங்கள் இலங்கையிலும் வளர்ச்சிபெற்றன. மேற்கத்திய விளையாட்டுப் பயிற்சிகளிலும் மோகம் ஏற்பட்டு இன்று அது ஒரு கணிசமான இடத்தைப் பிடித்துவிட்டது.

விளையாட்டுக் கழகங்கள் இன்று பெரிய நகரங்களிலும், கிராமங்களிலும் வளர்ச்சியடைந்திருந்த போதும், அது என்ன நோக்கத்துக்காக வெள்ளைக்காரனால் ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே எமதுநாட்டு விளையாட்டுக் கழகங்களும் இயங்கிவருவது கவலைக்குரியது. ஒரு மாலைநேர பொழுதுபோக்குக்காகவோ, அல்லது உடற்பயிற்சி கொடுக்கும் நிலையமாகவோ அன்றி, இந்நாட்டின் நாளைய வீரர்களாக வரவிருக்கும் பெருந்தொகையான இளைஞர்களை இந்த விளையாட்டுக் கழகங்கள் கொண்டிருப்பதனால் அதன்பணி அளப்பரியது. இளைஞர்களுக்கு உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும், வீரத்தையும் ஏற்படுத்திக்கொடுக்கும் விளையாட்டுக் கழகங்கள் அவர்களை நாட்டின் அரசியல், கலை கலாச்சாரத் துறைகளிலும் ஈடுபடச்செய்து இந்நாட்டில் ஒரு புரட்சிக்ரமான சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கு முனைதல் அதன் இன்றைய தலையாய கடமையாகும்.

''கோடிக்கணக்கான வர்க்க உணர்வு பெற்ற வெகுஜனங்களின் புரட்சி நடவடிக்கையின்றி, வெகுஜனங்களின் வீரஉணர்வின் பேரெழுச்சியின்றி மண்ணையும் விண்ணையும் அதிரச்செய்யும் உறுதிப்பாடும், திறமையுமின்றி எதேச்சாதிகாரத்தை அழித்தொழிக்க முடியாது'' என்ற மாமேதை ஒருவரின் கூற்று மக்களுக்கு வீர உணர்ச்சி வேண்டும். குறிப்பாக இளைஞர் சமுதாயத்துக்கு வீர உணர்ச்சி வேண்டும். அப்போது தான் அவர்கள் நாளைய சமுதாயத்தை ஒரு புரட்சிகர சமுதாயமாக அமைப்பார்கள் என்ற நம்பிக்கையில் விளையாட்டுக்கழகம் பெரும்பணிசெய்யக் கடமைப்பட்டுள்ளது எனலாம். ''ஆயிரம் வெட்டுக்கள்பட்டு இறக்க அஞ்சாதவன் எவனோ, அவனே சக்கரவர்த்தியைக் குதிரையிலிருந்து வீழ்த்தத் துணிவான்'' என்றார் ஒருமேதை. இதுவே இளைஞர்களிடம் இருக்கவேண்டிய சலியாத வீரஉணர்வு. இந்த வீரஉணர்வை வளர்க்க வேண்டியது விளையாட்டுக் கழகங்களின் கடமையன்றோ. நாம் வீரர்களை, உடல்வலுவுள்ளவர்களை ஐக்கியப்படுத்தி ஒரு சமுதாய மலர்ச்சிக்காகப் போராட விளையாட்டுக்கழகங்களை ஊக்குவிக்கவேண்டும். விளையாட்டுக் கழகங்கள் வெறுமனே விளையாட்டுப்போட்டிகளில் மட்டும் பங்குகொண்டு பரிசில்களைத் தட்டிக்கொள்ளவேண்டும். பேரும் புகழும் பெறவேண்டுமென்றுமட்டும் இயங்காது பரந்துபட்ட வெகுஜனங்கள் மத்தியில் தங்களை ஐக்கியப்படுத்தி மக்களுக்குச் சேவை செய்யவும் வேண்டும். நியாயங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்லி நியாயங்களுக்காகப் போராடுவதன்மூலம் மக்களுடன் இணைத்துக் கொள்ளவேண்டும்.

இன்னோரன்ன பணிகளில் உடற்பயிற்சிக் கழகங்கள் ஈடுபடவேண்டிய ஒரு மகத்தான காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். எனவே, உடற்பயிற்சி சமுதாயத்தின் உயர்ந்த இலட்சியங்களையும், அபிலாஷைகளையும் நிறைவேற்றும் ஒரு கலையாக, கழகங்கள் மக்களுக்குச் சேவைசெய்யும் ஸ்தாபனங்களாக ஒரு தனிநபரின் அபிலாஷைகளை நிறைவேற்றும் ஸ்தாபனமாகவன்றி முழுமக்களுக்கும் பயன்படும் ஒரு வெகுஜன ஸ்தாபனமாக வளரவேண்டும்.

*

எமது நல்வாழ்த்துக்கள்

**HARAN**
JEWELLERS

ஹரன்
ஜுவெல்லர்ஸ்

50, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

**Dealers in Hardware Furniture upholstry Materials & Paints.**

ஹாஜி
ஹாட்வெயர்ஸ்

HAJI HARDWARES

3, Stanley Road,
JAFFNA.

**The Space Donated By**

**Malaysia Recording Service**

121, Manipay Road,
JAFFNA.


**With the Best Compliments From**

**FAREENA JEWELLERS**

பரீனா
ஜுவெல்லர்ஸ்

57, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

தென்னகத் தாரகையின் 6-வது ஆண்டு விழாவையொட்டி தென்மராட்சி ரீதியில் நடாத்தப்பெற்ற பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள்



**செல்வன் த. நாகேஸ்வரன்**
*கலைவாணி சனசமூக நிலையம்*
பெரியமாவடி
சாவகச்சேரி.



**செல்வி பி. சிவத்திரை**
*மகளிர் மகாவித்தியாலய மாணவி*
சாவகச்சேரி.

எமது நல்வாழ்த்துக்கள்!

அழகிய
பவுண் நகைகளுக்கு

**சரவணபவன்**
**ஆபரண மாளிகை**

தங்க வைர நகை வியாபாரம்
உரிமையாளர்: கே. கே. யோகநாதன்
கண்டி வீதி, சாவகச்சேரி.

தரமான புடவைகளுக்கு
இன்றே
விஜயம் செய்யுங்கள்!

**வேல் பிறதர்ஸ்**

9, மார்க்கட், (சந்தையின் உள்ளே)
சாவகச்சேரி.

கைத்தறி றெடிமேட்
திருமண உடைகளை
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தென்னகத்தாரகையின்
6வது ஆண்டு விழாவுக்கு
எமது இதயபூர்வமான
நல்வாழ்த்துக்கள்!

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**
கண்டி வீதி,
சாவகச்சேரி.

தென்னகத்தாரகையின்
6வது ஆண்டு விழா
வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

V

**நியூ செந்தில் பிறின்றேஸ்**

சாவகச்சேரி.



# ஸங்கீதத்தின் பெருமை

திருமதி ராஜகுமாரி சின்னப்பு
வயலின் டிப்ளோமா
சங்கீத டிப்ளோமா.
இராமநாதன் அரசநுண்கலைக் கழகம்

ஸங்கீதம் என்பது செவிக்கு இன்பத்தைத் தரும் த்வனிகளைப்பற்றிய கலையாகும். மனிதர்கள், மிருகங்கள் பண்டிதர்கள், பாமரர்கள், விருத்தர்கள், பாலர்கள் முதலிய எல்லோருக்கும் இன்பத்தைத் தரக்கூடியது ஸங்கீதம்.

ஸங்கீதம் பயிலுவதினுல் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி முதலிய நற்குணங்கள் விருத்தியாகின்றன. இன்னும் அறிவு, புத்திக்கூர்மை, கற்பனுசக்தி ஞாபகசக்தி, நல்லொழுக்கம் முதலியவைகளும் மனேநிலை சம்பந்தமான ரோகங்களையும் ஸங்கீதத்தைக் கேட்பதனுல் விருத்தியாகின்றன. பல தேசத்து மக்களை ஒன்றுசேர்க்கும் படியான சக்தி இக்கலைக்கே உள்ளது. உலக ஐக்கிய பாவத்தை உண்டாக்கும் சக்தியும் ஸங்கீதத்திற்கு உள்ளது. அகம்பாவம் என்னும் துர்க்குணத்தை ஒழிக்கக்கூடிய சக்தி இச் ஸங்கீதத்திற்கு உண்டு. ஸங்கீதத்தை நிகரற்ற கலை எனலாம். ஸப்த ஸ்வரங்கள் எல்லா ஸங்கீதங்களுக்கும் பொதுவானது.

# பபி பபி

சுத்தமான பால் டொபி

தென்னகத் தாரகை என்றென்றும்
ஒளிவிட்டுப் பிரகாசிக்க
எம் நல்வாழ்த்துக்கள்

**Pure**

**COCONUT MILK TOFFEE**

# BABBY

A
B
B
Y

**BABBY INDUSTRIES**
Ladies College Road,
**CHAVAKACHCHERI.**

ஸங்கீதத்திற்கு கந்தர்வ வேதம் என்று பெயர். இவ்வேதம் நான்கு உபவேதங்களில் ஒன்று. கடவுள் வழி பாடு செய்வதற்கும் கடவுளை அறி வதற்கும் உரிய சாதனங்களில் ஸங் கீதமும் முக்கிய இடம்பெற்றுள்ளது. ஸாமான்னிய வார்த்தைகளினுல் வெளியிடமுடியாத நுட்பமான கருத் துக்களை இசையின் மூலமாக வெளி யிடக்கூடும். இதற்கு உதாரணமாக ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் செய் தருளிய கிருதிகளில் பிரகாசிக்கும் ஸாகித்ய பாவ ஸங்கதிகளைக் கூற லாம். ஸங்கிதம் ஒரு தெய்வீகமான கலை என்பதற்கு சிவபெருமான் கையில் ''டமருகமும்'', கண்ண பிரான் கையில் குழலும், ஸரஸ்வதி தேவியின் கையில் வீணையும் இருப் பதில் ஓர் ஆழ்ந்த கருத்து உள்ளது.

மனிதனுக்கு ஈசன் அருளியுள்ள குரல் பேசுவதற்கு மட்டுமல்ல பாடு வதற்குமேயாகும். பாடுங்கால்தான் ஒருவன தன் குரலின் முழுப்பயனை யும் அளடயமுடியும். கைவிரல்களும் இசைச் கருவிகளைப் பயிலுவதற்கா கவே வித்தியாசமான நீளங்களுடன் அமைந்திருக்கின்றன.

மனித தேகத்தின் அமைப்பிலும் இசைசம்பந்தமான பல தத்துவங் களைக் காணலாம். உதாரணமாக மனிதனின் குரல் காற்று வாத்தி யத்தின் அமைப்பையும், காது தோல் வாத்தியத்தின் அமைப்பையும் உள்காது (Inner ear) தந்தி வாத் தியத்தின் அமைப்பையும் ஒருவாறு உணர்த்துகின்றது.


ஸங்கீதம் பயிலாத ஒருவன் இவ்வுலகில் தனக்குக்கிடைக்கக்கூடிய அரிய கலை இன்பத்தை வீணுக இழக் கிறுன். உத்தமமான ஸங்கீதத்தை யும் நாம் அடிக்கடி கேட்கவேண்டும். அப்போதுதான் உட்காதிலுள்ள துல்லியமான நரம்புகட்கு உணர்ச்சி உண்டாகி நமக்கு ஏற்படும். இக்கார ணம்பற்றியே திருவள்ளுவர் செவிச் செல்வத்தைப் புகழ்ந்து கூறியிருக் கிறுர்.

''செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்
அச் செல்வம்
செல்வத்துளெல்லாம் தலை''

இறைவனையே மயக்கிக் கட்டுப் படுத்தவல்லது இந்த இசைஇன்பம்.

கைலையைப் பெயர்க்கும் எண் ணத்துடன் சென்று கைலையின்கீழ் இறைவனுல் நசுக்கப்பட்டபொழுது இராவணனின் வீணையினின்றும் எழுந்த சங்கராபரண இராகம் இறை வனை உருகச்செய்ய, இறைவன் இராவணனை மன்னித்தருளினுர் என் கிறது இராமாயணம். பாம்பாட்டி யின் இசையில் மயங்கிய பாம்புகள் அவனிடம் கட்டுண்டு ஆட்டம் போடுவதைக் காணலாம். கண்ண பிரான் மாடுகள் மேய்த்திடும்போது அவரது வேணுகானத்தில் மாடுகள் மயங்கி தம் பசியை மறக்குமாம் அத்துடன் அவ்விசையமுதையுண்டு வயிறுநிரம்பிய மாடுகள் பால்

## இணைப் பொருளாளர்கள்



திரு. ந. சண்முகசுந்தரம்



திரு. ரி. ஏ. தர்மகீர்த்தி


# தென்னகத்தாரகை

உப தலைவர்



திரு கே. செல்லத்துரை

விளம்பரப் பொறுப்பாளர்



திரு. கே. நடராஜா

கொடுப்பதிலும் தறுவதில்லையாம்-அஃறிணையுயிர்களையும் இசை ஆட்படுத்திக் கொண்டு விடுகிறது.

மற்றைய கல்விகளுக்கு இசைக் கல்வியும் உதவியாக இருந்துவந்த தென்பதற்கு பிரபல கணித மேதை ஐன்ஸ்டீன் ஒரு சிறந்த வயலின் வித்வானாகவும், இந்தியாவில் மன்னனாக ஆட்சிசெய்த ஒரு ஸங்கீத வல்லுனராகவும் சுவாதித் திருநாள் மகராஜா திகழ்ந்தமை இக்கூற்றிற்கு எடுத்துக்காட்டாகும். இவ்விசை வேத சாஸ்திரங்களில் சத்தப் பிரமாணம் என்றும் கூறப்பெற்றுள்ளது.

**வளர்க இசை இன்பம்**

நமது தாய் மொழியாம் தமிழ் உலகின் உயர் தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய்மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்திற்குள் அது உலகப் பொது மொழி ஆகியிருக்கும்.

—அறிஞர் அண்ணா—

அன்பளிப்பு

# மகேஸ்வரன்
## டிஸ்பென்சறி

அரசினர் அங்கிகாரம் பெற்ற ஆயுள்வேத
வைத்தியர்கள்

வைத்தியமணி:- சி. மகேஸ்வரன்

வைத்தியமணி:- கு. சின்னத்தம்பி

கச்சாய் வீதி. சாவகச்சேரி.


கணக்குப் பரிசோதகர்



திரு கே. நடராஜா


# தென்னகத் தாரகை

படப்பிடிப்பாளர்



திரு. கே. இரத்தினம்

உப பொதுச் செயலாளர்



திரு. இ. சண்முகலிங்கம்

# இந்திரன்ஸ்

31, தனங்கிளப்பு றோட், சாவகச்சேரி

◎ தையல் நூல்வகைகள்

◎ மங்கையர் அலங்காரப் பொருட்கள்

◎ அழகுசாதனங்கள்

◎ பரிசிற் பொருட்கள்

பெற்றுக்கொள்ள

# INTHIRANS

31, Thanankilappu Road, CHAVAKACHCHERI.

---

## Vali - East Northern Division M.P.C.S. Ltd.

வலி - கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

( பதிவு இல. யா. 1556 / 10-3-71 )

உங்களுக்குத் தேவையான

★ விவசாய உரம்

★ விவசாய மருந்துவகைகள்

★ பாவனைப் பொருட்கள்

★ புடவைகள்

இன்னும் பிற தேவைகளுக்கு

வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

T' Phone 14 T' Gram: VENDCOP

# தென்னகத்தாரகை ஆளுநர்கள்

காப்பாளர்கள்:

திரு. வி. என். நவரத்தினம் அவர்கள்
*(தேசிய பேரவை உறுப்பினர், சாவகச்சேரி.)*

திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை அவர்கள்
*(உதவி அரசாங்க அதிபர், சாவகச்சேரி.)*

திரு. கே. பாலச்சந்திரன் அவர்கள்
*(அதிபர், டிறிபேக்கல்லூரி, சாவகச்சேரி.)*

ஜனப். வி. முத்துராஜா அவர்கள்
*(முஹிதீன் ஜும்மா பள்ளிவாசல் தர்மகர்த்தாசபை உறுப்பினர்)*

திரு. வீ. எம். கணபதிப்பிள்ளை அவர்கள்
*(உரிமையாளர், வீ. எம். கே. நகைமாளிகை, சாவகச்சேரி.)*

திரு. எஸ். நவரத்தினம் அவர்கள்
*(கைத்தொழிலதிபர், சாவகச்சேரி.)*

தலைவர்;

சமூகஜோதி எஸ். கே. மயில்வாகனம் அவர்கள்

உப தலைவர்கள்:

திரு. கே. செல்லத்துரை அவர்கள்
திரு. ஏ. எம். கமால் அவர்கள்
திரு. வி. குமாரசாமி அவர்கள்

பொதுச் செயலாளர்:

திரு. வி. சி. குஞ்சிதபாதம் அவர்கள்

உப பொதுச் செயலாளர்:

திரு. இ. சண்முகலிங்கம் அவர்கள்

இணைப் பொருளாளர்கள்;

திரு. ரி. ஏ. தர்மகீர்த்தி அவர்கள்
திரு என். சண்முகசுந்தரம் அவர்கள்

கணக்குப் பரிசோதகர்:

திரு. கே. நடராஜா அவர்கள்

விளையாட்டு நெறியாளர்கள்:

திரு. பி. திருநாவுக்கரசு அவர்கள்
திரு. வி. வாமதேவன் அவர்கள்

விளையாட்டு இணைச்செயலாளர்கள்:

திரு. எம். விவேகானந்தன் அவர்கள்
திரு. எஸ். வி. பரமராஜா அவர்கள்

ஓவியர்:

திரு. என். முத்தாலிங்கம் அவர்கள்

படப்பிடிப்பாளர்

திரு. கே. இரத்தினம் அவர்கள்

அமைப்பாளர்கள்:

திரு. கே. மனோகரன் அவர்கள்
திரு. எஸ். விக்னேஸ்வரன் அவர்கள்

இசைப்பொறுப்பாளர்:

திரு. ஐ கணேஷ் அவர்கள்

நிர்வாக சபை உறுப்பினர்கள்:

திரு. ஆர். குலராஜா அவர்கள்
திரு. வி. செல்வராஜா அவர்கள்
திரு. எஸ். சற்குணராஜா அவர்கள்
திரு. ரி. நித்தியானந்தன் அவர்கள்

மலர் ஆசிரியர்: ஏ. எம். கமால் அவர்கள்

மலர்க் குழு:

திரு. எஸ். கே. மயில்வாகனம் அவர்கள்
திரு. வி. சி. குஞ்சிதபாதம் அவர்கள்
திரு. வேலாயுதம் அவர்கள்
திரு. வி. குமாரசாமி அவர்கள்
திரு. கே. ஜீவகதாஸ் அவர்கள்
திரு. க. முகம்மது கரீம் அவர்கள்
திரு, நா. முத்தாலிங்கம் அவர்கள்
திரு. எஸ். எச் றஷீன் அவர்கள்
திரு. வி. தர்மலிங்கம் அவர்கள்
திரு. என். எம். ஏ. காதர் அவர்கள்
திரு. கே. இரத்தினம் அவர்கள்

# எமது சனசமூக நிலைய வளர்ச்சிக்கு மாதாந்த நன்கொடை நல்குவோர்

திரு வி. என். நவரத்தினம் அவர்கள்
தே. பே. உறுப்பினர் சாவகச்சேரி

திரு கே. நடராஜா

திரு வி. சி. குஞ்சிதபாதம்

திரு ந. சண்முகசுந்தரம்

திரு எஸ். வி பரமராஜா

திரு எஸ். வேலாயுதம்

திரு என். முத்தாலிங்கம்

திரு வி. இராசதுரை

திரு க. ஜேசுதாஸ்

திரு எஸ். சிவபாலன்

திரு க. முகம்மது கரீம்

திரு என். எம். ஏ. காதர்

திரு கே. நடராஜா
(தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க தலைவர்)


திரு ரி. ஏ. தர்மகீர்த்தி

திரு கே. இரத்தினம்

திரு இ. சண்முகலிங்கம்

திரு எம். சிவசுப்பிரமணியம்

திரு எம். பி. சண்முகநாதன்



கரபந்தாட்டக் குழு 1977

# எமது சனசமூக நிலையத்துக்குப் பத்திரிகைகள் அன்பளிப்புச் செய்வோர் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| திரு | கே. செல்லத்துரை | — | வீரகேசரி |
| திரு | கே. நடராசா | — | தினகரன் |
| திரு | ஏ. எம். கமால் | — | மித்திரன் |
| திரு | ம. விவேகானந்தன் | — | ஈழநாடு |
| திரு | இ. சண்முகலிங்கம் | — | Daily News |
| திரு | ந. சண்முகசுந்தரம் | | |
| திரு | எஸ். வேலாயுதம் | — | தொழிலாளி |
| திரு | எஸ். கே. மயில்வாகனம் | — | சுதந்திரன் |
| திரு | த. ராஜகோபால் | — | தேசாபிமானி |
| திரு | கே. ஜீவகதாஸ் | — | சோவியத்நாடு<br>Peking Review<br>Independent Hsinhua |
| திரு | எஸ். எச். றஸீன் | — | Chinese Pictorial |
| திரு | ஐ. மன்சூர் | — | Mirror |
| திரு | K. ரகுநாதன் | — | நட்சத்திரமாமா |
| | தென்னகத்தாரகை | — | தினபதி சிரித்திரன் |

★

பேசிய வார்த்தை, எய்த அம்பு, சென்ற வாழ்வு, அலட்சியப்படுத்திய சந்தர்ப்பம், இவை திரும்பி வருதில்லை.

முன் பின் யோசியாமல் அவசரத்தில் வாக்குறுதி அளிக்கக் கூடாது. ஒருமுறை அளித்த பின் உயிர் போவதாக இருந்தாலும் அதை நிறைவேற்றியே தீரவேண்டும்.

—காந்திஜி—

தென்னகத் தாரகையின் 6-வது ஆண்டு விழாவை யொட்டி தென்மராட்சி ரீதியில் நடாத்தப்பெற்ற பேச்சுப் போட்டியின் பெறுபேறுகள்:-

## ஆண்கள்

முதலாம் இடம்;

செல்வன் த. நாகேஸ்வரன்

கலைவாணி சனசமூகநிலையம் பெரியமாவடி, சாவகச்சேரி

இரண்டாம் இடம்:

செல்வன் வி·விஷ்ணுநாதன்

வரணி, மத்திய சனசமூகநிலையம்

மூன்றும் இடம்:

செல்வன் ஜி. சிவனேஸ்வரன்

மீசாலை விக்னேஸ்வரவித்தியாலய மாணவன்.

## பெண்கள்

முதலாம் இடம்:

செல்வி. பி. சிவத்திரை

மகளிர் மகாவித்தியாலய மாணவி சாவகச்சேரி.

இரண்டாம் இடம்:

செல்வி. ரி. கங்காலட்சுமி

கலைமகள் சனசமூக நிலையம், தென்மட்டுவில் சாவகச்சேரி.

மூன்றும் இடம்:

செல்வி ஏ. ஆனந்தேஸ்வரி

மகளிர் மகாவித்தியாலய மாணவி சாவகச்சேரி.

With the Best Compliments
From

**KAMAL**
**HARDWARES**

**3, Stanley Road,**
**JAFFNA.**

**The Space Donated**
**By**

**FINE I N FINE**

Tailor & Readymade Garments

**18A , Grand Bazaar,**
**JAFFNA.**

அன்பளிப்பு
M
W
W
M
W
M
W
M
O

**K. புவனேந்திரன்**

58. கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

*With Best Compliments*
*From*

**RAHEEMS**

GENTS TAILORS

**6A, Grand Bazaar,**
**JAFFNA.**

(OPP. AMBIHAPATHY TEXTILES)



# தென்னகத் தாரகை நடனாலய

மாணவ மாணவிகள்

1977

# "சாவகச்சேரி" எனும் போதினிலே...

எம். நிலா

ஒரு காலத்தில் ''குழைக்காடு'' எனக் குத்தலாக வர்ணிக்கப்பட்ட எமது கிராமம் இன்று நகரமாக வளர்ந்து மாநகரமாகத் தொடர்ந்து முன்னேறிச் செல்லும் புதுமை வியப்புக்குரியது! மிகப் பின் தங்கிய நிலையில் இருந்து மிகவும் குறுகிய காலத்தில் முன்னேறிய நகரங்களுக்கு மிகச் சமீப கால உதாரணம் எமது நகரமென்றால் மிகையாகாது! பற்றைக் காடுகளும், பனை வடலிக் கூடல்களும் குச்சுக் குடிசைகளும் நிறைந்த எமது நகரின் பழைய இயற்கைக் காட்சி இன்றும் எம் மனக்கண் முன் நிழலாடுகின்றது. நாம் எவ்வளவு தான் பழமையின் இனிமையில் மோகங் கொண்ட போதிலும், செயற்கையழகுடன் மிளிரும் எமது நகரம் இன்றைய நவீன சமூகத்திற்கு இன்றியமையாதது! இருந்த போதிலும் நகரின் சுற்றுடலில் பழைய கிராமிய அமைப்பின் மிச்ச சொச்சங்கள் இன்றும் நிலைத்திருந்து இனிமையளிப்பது எமக்கு மனநிறைவளிக்கிறது!

நவீன கட்டிடங்களும் அகன்ற வீதிகளும், மின்னொளியும், கல்விக் கூடங்களும், பஸ், புகையிரத, தபால், நகர்காவல் நிலையங்களும், ஆஸ்பத்திரியும், கடைத்தெருக்களும் எமது நகருக்குப் புது மெருகூட்டும் அதே வேளையில் நகரின் இதயமான பகுதியில் அமைந்துள்ள 'சந்தை' இவற்றுக்கெல்லாம் மணிமகுடமாகக் காட்சி தருகின்றது! வந்தாரை வாழவைக்கும் எமது சந்தை கூடிய விரைவில் நவீனமயமாக்கப்படவுள்ளது என்னும் செய்தி எமக்கு மேலும் உவகையளிக்கிறது.

வயல்களையும் தோட்டங்களையும் தொழில் நிலையங்களையும் தன்னகத்தே கொண்டு, சிறந்த விவசாய தொழிலாள வர்க்கத்தைச் சிருஷ்டித்துள்ள எமது நகரம், பல உயர் கல்விக் கூடங்களையும் உருவாக்கியுள்ளது. அவற்றுள் நகரின் மத்தியில் அமைந்துள்ள டிறிபேர்க் கல்லூரி. இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகியவற்றை சிறப்பாகக் குறிப்பிடலாம். அவை எமது பகுதி மாணவர்களுக்கு ஆற்றிய, ஆற்றும் தொண்டு மகத்தானது.

எமது நகரின் முன்னேற்றத்தில் சனசமூக நிலையங்களும், விளையாட்டுக் கழகங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆங்காங்கு கிராமங்கள் தோறும், நகரின் மத்தியிலும் இக்கழகங்கள் சேவையிலீடுபட்டு வருகின்றன. இவைகளின் அரிய சேவையினால் எமது நகரில் சாதி இன மத பேதமற்ற, வீறும் விறுவிறுப்புங் கொண்ட ஒரு புதிய சமரச சமுதாயம் உருவாக்கப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி என்று குறிப்பிடும்போது எப்படி சந்தையை நினைவு கூராமல் இருக்க முடியாதோ அப்படியே எமது தேசிய பேரவை உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் அவர்களையும் நினையாமல் இருக்க முடியாது. அவர் தமது சேவைக் காலத்தில் எமது நகருக்காற்றிய தொண்டு அளப்பரியது! எமது நகரப் பொது ஸ்தாபனங்கள் அவரை என்றும் மறவா. கட்சியரசியலுக்கு அப்பாற்பட்ட பார்வையில், அவரது கம்பீர உருவம் எமது நகருடன் இரண்டறக் கலந்து உயர்ந்து நிற்கிறது. அதே போலவே எமது நகராட்சி மன்றமும் அதன் தலைவர்களும் ஊழியர்களும் ஆற்றிய தன்னலமில்லாத் தொண்டு, எமது நகருக்கு அழகூட்டியுள்ளது.

எமது நகரில் கோயில்களும், தேவாலயங்களும், பள்ளிவாசலும் ஒருமித்து நிமிர்ந்து நிற்கும் காட்சி எமது மக்களின் சாதி இன மத பேதமற்ற ஒருமைப்பாட்டுக்குச் சாட்சியாக விளங்குகிறது!

குறுகிய இனமத வாதங்களால் ஏற்படும் சமூகப் பூசல்களுக்கு எமது நகரில் இடமேயில்லை. புடம் போட்ட விவசாயிகளும், புதுமை நாடும் வாலிபர்களும் புறம் நோக்காப் பெண்டிரும், புகழ் கொள்ளா ஆடவரும் மலிந்து காணப்படும் எமது நகரில் காடைத்தனம் தலைதூக்கியதே கிடையாது! இக் கண்ணியமான நிலை உருவாக எமது நகர காவல் துறையினர் ஆற்றிய பங்கும் குறிப்பிடத்தக்கது.

தேன்சிந்தும் மாங்கனிகள், தெவிட்டாப் பலாப்பழங்கள், பனைதரும் பழம், பனங்கிழங்கு, ஒடியல், பனங்கட்டி, பனையோலைக் கைவண்ணப் பாய் பறிகள், ஏனைய கிழங்கு வகைகள், செழிப்பான காய்கறிகள் இவை யாவும் எம் மண்ணின் அருட் கொடைகள். பனை தென்னை அருட்கொடையால் கைத்தொழில் பல அளித்து, இல்லாரும் உள்ளவராய் வாழச் செய்வது எம் நகரம்.

இவ்வாறு பல நவீன அமைப்புகளையும் பல கலைகளையும், கலைஞர்களையும், கனிகளையும் தந்த எமது நகரம் வேறு பல சிறப்புக்களையும் தரக் காத்திருக்கிறது.
''செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே''
என்றான் பாட்டுக்கோர் பாவலனும் பாரதி.
அதே போன்று '' 'சாவகச்சேரி' எனும்
போதினிலே இன்ப ஊற்றுப் பெருகுதெம்
உள்ளத்திலே''

# MIDLAND MOTORS

KACHCHAI ROAD
CHAVAKACHCHERI

நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்களும்,
உழவு இயந்திரங்களின் உதிரிப்பாகங்களும்,
துவிச்சக்கரவண்டிகளின் உதிரிப்பாகங்களும்
பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்

# மிட்லன்ட் மோட்டோர்ஸ்

கச்சாய் வீதி.
சாவகச்சேரி.



தென்னகத்தாரகை முழு மதியின் ஒளிதர
வாழ்த்துகிறோம்!

# முருகன் மில்

சாவகச்சேரி

எம்மிடம் சகல விதமான விவசாய மருந்துகள்
பசளை வகைகள், கோழித்தீன், மாட்டு உணவு
முதலியன மலிவாக ஒரேவிலையில் பெற்றுக்கொள்ளலாம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

# முடிவு என்ன...?

கல்வயல் அருள்வேலமுகன்

காலப் பெருங்கடல் கதறிக்கொண்டே இருக்கின்றது. அதன் அலைக் கரங்கள் குமுறிக் கொந்தளித்து கரைமீது மோதிப் பிரள்கின்றன......!

உலகத்திலே தோன்றிய அத்தனை பொருட்களுக்கும் ஓர் எல்லைக் கோட்டை அமைத்து அவற்றை வரையறுத்துக் கட்டியாளும் பெருமையே அதன் திறமை. தன்னிகரற்ற பெருமையுடன் காலப் பெருங்கடல் அலைமோதிக் கொண்டே இருக்கிறது......!

அதோ ஒரு பெண் உருவம் வந்து கொண்டே இருக்கிறது.....!

ஆமாம், இயல் இசை நாடகம் அத்தனைக்கும் மொத்த உருவமாம் கன்னல்த் தமிழ் கன்னியவள் தென்றலின் துணை கொண்டு சீதளப் புன்னகையுடன் காற் சிலம்பின் கிண்கிணி ஓசை கிளம்ப அதோ வந்துகொண்டிருக்கிறாள்.

''கலீர் கலீர்
கலீர் கலீர்..!''

இசையோடு இசைந்து நாதவடிவாக தென்றலிலே மிதந்து தாவி வருகின்றாள். பல்கலைகளையும் தன்பால் அடக்கிய பாவையவள். வளம் நிறைந்த இடமெல்லாம் சென்று பார்த்துப் பரவசம் அடைகின்றாள்: அவள் உடல் மகிழ்ச்சியால் பூரிக்கிறது. பரவசத்தால் குலுங்குகிறது. அவள் மதிநிகர் வதனத்தில் ஓர் இறுமாப்பு. கலையின் பெருமை இறுமாப்பிற்கு காரணம். கன்னித் தமிழ் நானே கலையின் ஓர் நந்தா விளக்கு அவள் புன்னகை பூர்த்தாள். அந்தப் புன்னகையிலும் ஓர் பெருமை இழையோடியது.

''ஆம் கவி பாட கணக்கற்ற கவிஞர் குழாம், இலக்கணம் செய்ய எண்ணிறைந்த அறிஞர் குழாம், நாடகக் கலை வளர்க்க கணக்கற்ற கலைஞர்கள், தொண்டர்கள். என்னையும் என் கலையையும் வளர்க்க இந்த வையத்தில் கோடி கோடி மைந்தர்கள். எனக்கு நானே நிகர். எனக்கும் ஏதாவது குறை உண்டா?''

தமிழ் அணங்கு தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். அன்னை தமிழ் அன்ன நடை பயின்றாள்.

அலைமோதும் காலப் பெருங் கடலை அவள் பார்த்தாள். அந்தோ! பரிதாபம். அலைமோதிக் குமுறும் காலப் பெருங்கடலுக்கு ஆறுதல் மொழி பகர அங்கே புறப்பட்டாள்.

''கலீர் கலீர்
கலீர் கலீர்......!''

என்ற இசையோடு கடலிடம் தாவி ஓடி வந்தாள்.

''கிட்ட வராதே நில், நில்...!

காலப் பெருங்கடல் கர்ச்சித்தது. ''ஆகா! ஆறுதல் கூற வரும் எனக்குத் தடையா? காலப் பெருங்கடலே, என்ன உன் ஆணவம்? அகந்தை அறிவுக்கு சத்துரு. உன் உள்ளம் நொந்தாலும் உன் ஆணவம் மட்டும் உன்னை விட்டுப் போகவில்லை...... பேதை.''

புன்னகை பூத்தாள் தமிழ் அணங்கு. காலப் பெருங்கடலை நெருங்கினாள்.

''என்னை நெருங்காதே நில்......''
காலப்பெருங்கடல் மீண்டும் ஓலமிட்டாள்;

திகைத்தாள் தேன்மொழிச் செல்வி.

''பேதையே, எதற்காக என்னைச் சந்திக்க மறுக்கிறாய்......?

''எதற்காகவா?'' ஓர் ஏளனச் சிரிப்பு. ''தேன்மொழிச் செல்வியே, எதற்காக இந்த ஆட்டமும், பாட்டமும். கொஞ்சம் அமைதியாகத்தான் இருந்துகொள்ளேன்.

எத்தனை நாட்களுக்குத்தான் உன் ஆட்டமும் பாட்டமும். உன் கலைகளாம் கலைகள்... இரு... இரு''

''பேதையே, என் கலைகளையா இகழ்ந்து பேசுகிறாய்? கலைகளைப்பற்றி உனக்கு என்ன தெரியும். என் அருள்மொழியின் இயல் இசை பற்றித் தெரியுமா உனக்கு? என் திருமொழியின் நாடகம் பற்றித் தெரியுமா உனக்கு? இயல், இசை, நாடகம் இம் மூன்றும் சேர்ந்ததே என் உடல். இந்த உடலுக்கு ஆயகலைகள் அறுபத்திநான்கும் அணிகலன்களாக அமைந்துள்ளன. இசையோடு பிறந்தேன். இயலோடு வளர்ந்தேன்: இந்த உலகில் நாடகம் ஆடி மகிழ்கின்றேன். அதை அறிவாயா நீ..?''

ஓர் ஆணவச் சிரிப்பு.

''ஆகா! நீயும் உன் கலையும்......, இத்தனையையும் கட்டியாள்வது நான். என் அலை மோத மோத நீயும் தேய்ந்து தேய்ந்து மடிகின்றாய். பேதைப் பெண்ணே, உன் கலைகள் எல்லாம் என்றோ ஒருநாள் அப்ப பெரியது உண்மைதான்; வளர்ந்து உலகிலே தலை நிமிர்ந்து நின்றது உண்மைதான். ஆனால், இன்று உனக்கும் உன் கலைகளுக்கும் தேயும் காலம் வந்துவிட்டது.''

காலப் பெருங்கடல் ஆணவத்துடன் பேசினாள்.

''தவறு, தவறு, நான் தூய கலைமகள். கறையற்றவள். எனக்கும் என் கலைகளுக்கும் எப்படித் தேய்வு நிலை இருக்க முடியும்?'' தேன் தமிழ்க் கன்னியின் ஓலக் குரல் ஓங்கியது.

''ஏன் வீணாக வீம்பு பேசுகிறாய்? உன் பெருமைகள் எல்லாம் இன்று பேச்சளவில்தான். பழம் பெருமை பேசும் நீ இப்பொழுது வலியற்றவள். காலவெள்ளத்தால் கரைந்துவிடும் நிலைக்கு வந்து கொண்டிருக்கிறாய். உன்னையும் உன் கலைகளையும் மனிதன் மறந்துவிட்டான். விரைவில் உன் சுவடே தெரியாதபடி உன்னை நான் அழித்து விடுகிறேன்.''

காலப் பெருங்கடல் முழங்கியது. தமிழ் அன்னையின் கயல் விழிகளிலிருந்து உதிரம் கொட்டியது.

''இறைவா, காலப் பெருங்கடலை எதிர்க்கும் வலிமையை எனக்குத் தரமாட்டாயா? காலப் பெருங்கடல் என்னையே அழிக்கப் போகின்றாளாமே? ஆண்டவா, என் தமிழ்ப்பெரும் வீரத் திருமக்களே, எந்தன் முந்திய வலிமையை மீண்டும் தரமாட்டீர்களா?''

காலப் பெருங்கடல் விட்டுவிடவில்லை. ''இதோ உன்னை என்னுள் சங்கமம் ஆக்குகின்றேன் பார்.'' காலப் பெருங் கடல் தன் அலைக கரங்களை நீட்டியது. தமிழ் அன்னை ஓட முயன்றாள். தேன் தமிழ்ச் செல்வியாள் ஓடிக் கொண்டே இருக்கிறாள். காலப் பெருங் கடலும் தொடர்கிறது. தமிழ் அன்னை அவலக் கோலம் கொண்டு பாய்ந்தடித்து ஓடிக்கொண்டே இருக்கிறாள். தமிழ் அன்னையின் நிலையை இந்த உலகிலுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் கண்டு கண்ணீர் வடிக்கட்டும். தமிழ் அன்னையின் விடுதலைக்கு வேண்டிய வழிகளைச் செய்ய ஒரு தமிழ் வீரத் திருமகனாவது வரமாட்டானா? ஓடிவந்து கைகொடுக்க மாட்டானா? என்ற நம்பிக்கை அவள் நெஞ்சில் பிரகாசிக்க அவளும் ஓடிக் கொண்டே தான் இருக்கிறாள். அதோ...! அந்த ஓசையும் அவள் செவிகளில் விழத்தான் செய்கிறது.

''காலப்பெருங்கடல் தாண்டவும் - தமிழ்
சூழும் துயரினைத் துடைக்கவும்,
கோலப் பெருமக்கள் கூடுவோம் - தாயின்
சீலத் திருவடி போற்றுவோம்.

ஆமாம், இந்த ஓசை இப்பொழுது தமிழ் அன்னையின் காதுகளில் தெளிவாக விழுகிறது...! ஆனால் இதன் முடிவு..?

# சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

* உங்கள் பணத்தைப் பாதுகாப்பதற்கும் கூடுத லான வட்டியைப் பெறுவதற்கும் எமது கிராமிய வங்கியில் ஓர் சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள். வேண்டிய நேரம் வைப்புப் பணத்தை திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

* நகை அடைவு வைப்பதானல் எமது கிராமிய வங்கிக்கு வாருங்கள்.

* உங்களுக்குத் தேவையான பாவனைப் பொருட் கள், புடவைகள், கட்டிடப்பொருட்கள், நூரூணி ஓடுகள், மட்பாண்டப் பொருட்கள் ஆகியவற்றிற்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்.

சேவையே எமது நோக்கம் !

**சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

பிரதான வீதி,
சாவகச்சேரி.

தென்னகத் தாரகையின்
பணி சிறக்க
எமது நல்லாசிகள்

## இராமலிங்கம் மில்ஸ்

இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.

தென்னகத் தாரகையில்
அங்கத்துவம்
பெறவேண்டுமா?

இன்றே நாடுகள்

பொதுச் செயலாளர்

## தென்னகத்தாரகை

டச் வீதி,
சாவகச்சேரி.

— அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம் —

# கௌரி தங்கமாளிகை

209, கண்டி வீதி, சாவகச்சேரி.

உரிமையாளர்: சி. ஆர். தர்மதுரை

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

# கனவும் நினைவும்

வித்துவான், புலவர் 'வேல்மாறன்'

பனித்துளிகள் பட்டு உதிர்ந்து விழும் நெய்தற் பூக்கள் பரவலாய்க் கிடக்கும் பால வெண் மணலிலே — பாங்கு தமிழ்த் துறைவன் பைந்தமிழ்ப் பாவையாளை அணைந்து மகிழ்ந்தான். அவ்வணைப்பில் புருவத்தின் ஓரமாய் நெளிந்து புரளும் அவளின் நெடுங்கூந்தல் நிலத்தின் மலர்க் குவியலிற் பட்டு அமுங்கியது. முத்துக் களைப் பதித்தது போன்ற அவளின் பல் வரிசையில் ஊறும் அமுத நீரைப் பாலி லும் மேலாய் மெய்மறந்து சுவைத்தான். அவளுடைய மதிமுகமும், செவ்விளநீர் மார்பும், அவன் முகத்தினுள்ளும் நெஞ்சி னுள்ளும் புதையுண்டன. நீலக் கடலின் நெடும் அலைகள் கரையுடன் மோதி — அக்கரையுடன் அடங்கிக் கலப்பது போல் காதலரின் உடலும் உயிரும் தம்முட் தாம் கலந்தன.

— "கண்ணே! என்னுடன் பேசமாட் டாயா?"

— "அத்தான்! தாங்கள் வந்ததும் நிறையப் பேச வேண்டுமென்றுதான் இருந் தேன். ஆனால், உங்கள் வருகையைக் கண் டதும் .................."

— "வருகையைக் கண்டதும்! பேசு அன்பே பேசு! குயிலினும் இனிய உன் குரலைக் கேட்டு எத்தனை நாட்களாகின் றது தெரியுமா!"

— "அன்பரே! இனிமேல் தாங்கள் என்னை விட்டுப் பிரியமாட்டீர்கள் தானே!"

— "பிரிவா! பிரிவு இத்துணை கொடி யது — துன்பத்திலும் துன்பமானது — என்பதை ஏற்கனவே அறிந்திருந்தேன் என்றால், உன்னைப் பிரிந்திருப்பேனா கண்ணே!"

— "கண்ணாளா! தங்களுக்கு இத்துணை துன்பம் என்றால் எனக்கு எத்துணை துன்ப மாக இருந்திருக்கும்!"

— "ஆருயிரே! அதை உணர்ந்து தானே அதிவிரைவாய்க் கடமையை முடித்து வந்தேன்!"

— "அத்தான்!"

— "அன்பே! இனிமேல் நமக்குப் பிரி வென்பதே இல்லை! இன்று முதல் உன் கொஞ்சு மொழியில் நெஞ்சங் கலந்து, மெய்மறந்து விடியும்வரை தூங்குவேன்!"

— "அத்தான்!"

இருவருடைய இதழ்களும் ஒன்றாகிய தால் தொடர்ந்து பேச்சு எழுவதற்கு இடமேயில்லை.

தலையணையுடன் அமுங்கிக் கிடந்தவ ளுடைய மலர் முகம் சிறிது நேரத்தின் பின் அசைவு கண்டது. அவ்வசைவோடே உறக்கத்தில் மூடியிருந்த அவள் இமைக ளும் மெல்லத் திறந்தன. உடனே தன் வலக்கரத்தை அருகே தடவியபடி பார்த் தாள்.

வெறுமையான மெத்தையைத் தான் அவளது கரம் தடவியதே தவிர, தலைவ னின் தோட்பரப்பைத் தடவவேயில்லை. அப்போதுதான் அவ்விடத்தே தலைவன் இல்லாது தான் மாத்திரம் கிடப்பதை அறிந்தாள். இதுவரை தலைவனுடன் கலந்து மகிழ்ந்தது எல்லாம் கனவு என்ப தை உணர்ந்தாள். உடனே எழுந்து தலை மாட்டுக் கட்டிற் சுவரோடு பொருத்தி யுள்ள விளக்கின் காம்பைத் தூண்டி, கண்களைத் தன் மார்புத் துணியால் துடைத்து, சாளரத்தின் அருகே வந்து

அதன் திரைச் சீலையை விலக்கி வெளி உலகைப் பார்த்தாள்!

கடலின் அடிப்புறத்தே கிழக்குவானின் கீழ்க் கோட்டின் இளங் கதிரவனின் வெளிப்புக் காணப்பட்டது. கடலின் அலைகள் மெல்லிய காற்றில் அடுக்கடுக் காய் எழுந்து கரையுடன் இரைந்து — மடிந்து — தவழ்ந்து அடங்கிக் கொண்டே இருந்தன. அப்போது அவள் நெஞ்சத் துள் எழுந்த பெருமூச்சு, கடலின் அலைகளைப் போலவே எழுந்து அவள் நெஞ்சக் கரையுள் அடங்கி விட்டது. நெய்தற் பூக்கள் செறிந்துள்ள அழகிய கடற்கரைக் கானலில் தான் தலைவனுடன் கலந்து மகிழ்ந்தது எல்லாம் வெறும் கனவில் மாத்திரமே தவிர நனவில் அன்று என்பதைத் தானே நினைத்துப் பார்க்கின்றபோது அவளின் நிலை அவளுக்கே பரிதாபமாக இருந்தது.

— ''நனவைப்போல எனக்குக் கொடுமை தருவது வேறொன்றுமில்லை. நனவென்ற ஒரு பாவி இல்லையாயின் கனவின்கண்வந்த காதலர் என்னை விட்டு ஒரு போதும் நீங்கவே மாட்டார். அதல்லாமல் நனவின் கண் வந்து அன்பு செய்யாதவரைக் கனவுதானே தேடித் தருகின்றது. அது தேடித் தருவதினாற் தான் அக்கனவில் அவரைப் பற்றிய காதல் நிகழ்ச்சிகள் எம்மட்டில் உண்டாகின்றன. இதையெல்லாம் இந்த ஊர் நினைத்துப் பார்க்கின்றதா? நனவு ஒன்றையே வைத்து, அவர் நம்மைவிட்டு நீங்கினார் என்று இவ்வூரார் அவரையே மேலும் மேலும் தூற்றிப் பேசுகின்றனர். உண்மையிலேயே இந்த ஊரார் என்னைப்போல் அவரைக் கனவில் காண்கிறதில்லையே?''

''நனவுஎன ஒன்றுஇல்லை ஆயின், கனவினால்
காதலர் நீங்கலர் மன.''
(குறள் — 1216)

''கனவினால் உண்டாகும் காமம் - நனவினால்
நல்காரை நாடித் தரற்கு.''
(குறள் — 1214)

''நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர்.''
(குறள் — 1220)

# ஆண்டு விழா மலருக்கு...

ஆசிச் செய்தி வழங்கிய பெரியார்கள்
விடயதானம் உதவிய வித்தகர்கள்
கவிதைகள் ஈந்த கவிஞர்கள்
விளம்பரங்கள் தந்துதவியோர்
நன்கொடை நல்கியோர்
அட்டை ஓவியம் படைத்த ஆசிரியர் திரு. நா. முத்தாலிங்கம்
அவர்கள்

ஆலோசனை பலதந்து, மலர் கோப்புக்கான பொறுப்புகள்
—பல ஏற்ற சைவமணி வித்துவான்—
—மு. சபாரெத்தினம் அவர்கள்

காலமறிந்து துரித சேவை புரிந்த சாவகச்சேரி
— குகன் ஸ்ரூடியோ ஸ்தாபனத்தார்

யாழ். ஞானம்ஸ் ஸ்ரூடியோ ஸ்தாபனத்தார்

இதழ்களாகக் கொடுத்த விடயங்களைக் குறுகிய காலத்தில் அரிய மலராக ஆக்கித் தந்த சாவகச்சேரி திருக்கணித அச்சகத்தார்
மலர் மணம் வீச உழைத்த ஏனையோர்
ஆகியோர்க்கு
எமது நீங்கா நன்றிகள்.

ஆசிரியர்
**மலர்க் குழு சார்பாக**

# இவர்களுக்குத் தாரகையின் உளங்கனிந்த நன்றிகள்

கழகக் கொடியேற்றி விழாவை ஆரம்பித்துவைத்த சாவகச்சேரி
காவல்துறை அதிபர் அவர்கள்
மலரின் முதற் பிரதியைப் பெற்று ஆதரவு நல்கிய
திரு. வி. எம். கணபதிப்பிள்ளை அவர்கள்
காலை மாலை நிகழ்ச்சிகளுக்கு நடுவர்களாகவும் உதவியாளர்களாகவும்
கடமை புரிந்தோர்

இரவு நிகழ்ச்சியின் பிரதம விருந்தினர் அவர் தம் துணைவியார்
சிறப்புரை நிகழ்த்த வந்த பெரியார்கள் இசை நிகழ்ச்சிகளை இலவச
மாகத் தந்த இசைக் குழுவினர்
நாடகம் தந்த கலைஞர்கள்
நீர்வேலி ''நித்திலைட்'' ஸ்தாபனத்தாரின்
மின்னொளியை இலவசமாகப் பெற்றுத்தந்த எமது அங்கத்தவர்
திரு. எஸ். சிவபாலன் அவர்கள்
ஒலியமைப்புச் செய்தோர்
விழாத்தேவைகளின் பொருட்டு வாகன சேவை அளித்தோர்
காட்சிக் கரப்பந்தாட்டத்தில் பங்குகொண்டு விழாவைச் சிறப்
பித்த ஆவரங்கால் ஐக்கிய விளையாட்டுக் கழகம்
மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம்
போட்டிகளுக்கான பரிசுப் பொருட்களை அன்பளிப்புச் செய்தோர்
விழா சம்பந்தமான பேச்சுப்போட்டி உட்பட, சகல போட்டிகளிலும்
கலந்து கொண்ட கழகங்கள், சனசமூக நிலையங்கள், கல்லூரிகள்
ஏனையோர் பேச்சுப் போட்டியை நடாத்த இடவசதி தந்து,
விழா சிறப்புற சகல ஒத்துழைப்பும் நல்கிய சாவகச்சேரி நகர
சபை விசேட ஆணையாளர் அவர்கள்
அலுவலக உத்தியோகத்தர்கள், விழாவின் போது அமைதியையும்
ஒழுங்கையும் நிலைநாட்டிய சாவகச்சேரி காவல் துறையினர்
விழாவில் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்த பொதுமக்கள்
விழா வெற்றி பெற சகல துறைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய
ஏனையோர்.

பொதுச் செயலாளர்
**தென்னகத்தாரகை**

# மன்னிக்க
# வேண்டுகிறோம்

6வது ஆண்டுவிழாவுக்கான நன்கொடைகளும், போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்கான பரிசில் அன்பளிப்புகளும் எமக்குத் தொடர்ந்து கிடைத்து வருவதால், எமது திட்டப்படி ஒரு முழுமையான விபரப்பட்டியலை இங்கு பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். மேற்படி விபரப்பட்டியல், விழா முடிவு பெற்றபின் எம்மால் தயாரித்து வெளியிடப்பெறவிருக்கும் வரவு செலவு அறிக்கையுடன் இணைத்து வெளியிடவுள்ளோம். இத்தவிர்க்க முடியாத தன்மைக்காக மன்னிக்க வேண்டுகிறோம்.

**பொதுச் செயலாளர்**
- தென்னகத்தாரகை -

# தென்னகத்தாரகையின்
# தேனினைய
# வாழ்த்துக்கள் !

✷ அனைத்திலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றி வாகை சூடிய இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரிக்கும்

✷ தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே, உதவி அரசாங்க அதிபரால் நடாத்தப் பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்று சுற்றுக்கிண்ணத்தை தட்டிக் கொண்ட மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்திற்கும்.

தென்னகத்தாரகை தனது தேனினைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறது.

# BOBBY

## SAREE PRINTING

"கொடியுடல் நங்கையரின் துவண்டிடும்
துடியிடை புதுமுறை உடை பெற
கவி யன்னார் புகழுரை உயிர்பெற
"போபி" யினர் துணை நாடிச் செல்வீர்"

ஆம்!

உங்கள் பட்டு, பருத்தி, நைலோன்-
-புதிய பழைய சேலைகள் சீத்தை வகை
கள், நீங்கள் விரும்பும் நவீன டிசைன்
களில் கண்கவர் வர்ணங்களில் அச்சிடச்
சிறந்த ஸ்தாபனம்:

# போபி

டிஸ்பென்சரி வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

குறிப்பு: அச்சுவேலைகள் குறுகிய காலத் தவணையில் செய்து தரப்படும்

"BOBBY" DISPENSARY ROAD,
MADDUVIL NORTH,
CHAVAKACHCHERI.

அரிவையரின் அழகுக்கு அழகூட்டி

நவநாகரீகமாகத் திகழவைக்கும்

தனித்துவமும் தரமும்மிக்க

அழகிய

**தங்கப்பவுண் நகைகளுக்கும்**

**வைரங்களுக்கும்**

சிறந்த ஸ்தாபனம்

# வீ. எம். கே. தங்க மாளிகை

நகை வைர வியாபாரம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

*With Best Compliments*

*From*

# K. NADARAJAH

**FOREIGN & LOCAL LIQUOR DEALER**

KANDY ROAD, **CHAVAKACHCHERI.**

Printed at the Thirukkanitha Press Madduvil—Chavakachcheri.